உமா வாசகம்

ஐந்தாம் புத்தகம்

1939-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பாடத்திட்டத்தின்படி
எழுதப்பட்டது.

த. சே. உமாபதி, M. A., L. T.,
தலைமையாசிரியர்,
ஸி. அப்துல் ஹகீம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1950
MADRAS

உமாதேவன் கம்பெனி
16, செம்புதாஸ் தெரு, சென்னை-1

பதிப்புரிமை] 1949 [விலை அணா 9

முதற்பதிப்பு 1949

87995

The Jupiter Press Ltd., Madras—11-49.

முகவுரை

'உமா வாசகம்' என்னும் பெயருடன் வெளிப்போதரும் நூல் வரிசையில் இது ஐந்தாம் புத்தகம். இது 1939-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட பாடத்திட்டத்தின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது; அத்திட்டத்தை முற்றிலும் தழுவி இயற்றப்பெற்றது; ஆசிரியரின் நீண்ட அனுபவத்தால் குழந்தை உள்ளத்தின் நிலையறிந்து எழுதப்பெற்றது.

குழந்தைகளின் கண்ணைக் கவரும் படங்களும், கருத்தைக் கவரும் பாட்டுக்களும், மனத்தை மகிழ்விக்கும் விளையாட்டுக்களும், மொழியறிவை வளர்க்கத்தக்க பயிற்சிகளும் இந்நூலின்கண் நிரம்ப இடம் பெற்றுள்ளன. பட்டணங்களிலும், கிராமங்களிலும் உள்ள எல்லாக் குழந்தைகளும் எளிதில் அறியக்கூடிய எண்ணூறு புதிய சொற்கள் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன.

மேனாட்டு நூல்களையொப்ப இஃது எல்லாச் சிறப்புக்களும் நிறைந்து விளங்கவேண்டுமென்பது ஆசிரியரின் ஆவல். இதன் ஏடுகளைப் புரட்டிப்பார்க்கும் எவர்க்கும் இஃது எளிதில் புலனாம்.

இந்நூல் அச்சாகுங்கால் ஏடுகளைப் பரிசோதித்து, இன்றியமையாத திருத்தங்கள் செய்து உதவிய என் நண்பர் திருவாளர் **வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கட்கு** என் உளமார்ந்த நன்றி உரியது. தமிழ் நாட்டுக் குழந்தைகள் இதனைப் படித்துப் பயனுறுதற்கு ஆவன செய்யுமாறு ஆசிரிய அறிஞர்களை வேண்டுகிறேன்.

சென்னை,
31–10–49.

த. சே. உமாபதி

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
1.	தாய் மொழி (பாட்டு)	1
2.	தமிழ் மொழி	2
	விளையாட்டு—1	5
3.	குரங்கும் குல்லாய் வியாபாரியும் (கதைப் படம்)	6
4.	கைத்தொழில்கள் (பாட்டு)	7
5.	தீக்குச்சி	8
	விளையாட்டு—2	12
6.	பொங்கல் விழா	13
7.	தஞ்சை நகரம்	16
8.	இமாலய ஏற்றம்	20
9.	ஊன் உண்ணும் செடிகள்	24
10.	ஆறு (பாட்டு)	28
	விளையாட்டு—3	29
11.	ஒட்டகம் தோற்றுவிக்கப்பட்டது ஏன்?	31
12.	பத்திரிகைச் செய்தி—I	34
13.	கண்ணபிரானுர் தூது (நாடகம்)	36
14.	குளிர் பாலையில் மனித வாழ்க்கை	42
	விளையாட்டு—4	47
15.	வழிப்போக்கனும் குரங்கும் (கதைப் படம்)	48
16.	காற்றுடி யந்திரம் (பாட்டு)	49
17.	சிற்பமும் ஓவியமும்	50
18.	குர் - ஆன்	55
	விளையாட்டு—5	58
19.	கப்பல் ஓட்டிய தமிழர்	59
20.	ஒரு நிலக்கரித் துண்டு கூறிய வரலாறு	63
21.	சாந்து பீபி	68
22.	நிலா (பாட்டு)	73
	விளையாட்டு—6	74
23.	பகலும் இரவும் (பாட்டு)	75

எண்	பொருள்		பக்கம்
24.	ஸ்தல சுய ஆட்சி—ஜில்லா போர்டு	....	76
25.	இருப்புப்பாதை வண்டித் தொடர்	....	80
26.	'துண்ணிய கருமமும் எண்ணித் துணி.'	....	85
27.	பத்திரிகைச் செய்தி—II	....	88
28.	உயிர்ப் பாதுகாப்பு முறைகள்	....	90
29.	கடிதங்கள்	....	95

செய்யுட்பாடங்கள்

I.	துதிப் பாட்டு	....	98
II.	சதகத் திரட்டு :		
	1. செல்வச் சிறப்பு	....	99
	2. செய்யத் தக்கவை	....	99
	3. இதனில் இது நன்று.	....	100
	4. ஒன்றில்லாமல் ஒன்று பயனில்லை.	....	101
III.	கதைப் பாட்டு (முயலும் சிங்கமும்)	....	101
IV.	நீதி நூல்கள் :		
	1. இனியவை நாற்பது	....	103
	2. இன்னா நாற்பது	....	104
	3. நன்னெறி	....	105
V.	தனிப் பாடல்கள்	....	106
VI.	தமிழ் மொழி வாழ்த்து	....	108

உமா வாசகம்

ஐந்தாம் புத்தகம்

---

1. தாய் மொழி

(பாட்டு)

ஆதியில் உலகம் போற்ற உலவிய
அமிழ்தெனுந் தமிழ்மொழியே!
மாதொரு பாகன் மகிழ்ந்தெமக் கீந்த
மதுரத் தமிழ்மொழியே! 1

அன்று முதலா இன்று வரையில்
அழியாத் தமிழ்மொழியே!
என்றும் இளமை குன்று தழகுடன்
இலங்குந் தமிழ்மொழியே! 2

காதுக் கினிய ஓசை யுடைய
கன்னித் தமிழ்மொழியே!
ஓதற் கினிய நூல்க ளீன்றே
ஓங்கும் தமிழ்மொழியே! 3

தாயுந் தந்தையுங் கொஞ்சி என்னைத்
தழுவிய தமிழ்மொழியே!
ஆயும் புலவர் கூடி நாடி
அறிந்த தமிழ்மொழியே! 4

தெலுங்கு கன்னடந் துளுமலை யாளந்
தோற்றிய தமிழ்மொழியே!
இலங்குங் கோயில் எங்குந் தங்கும்
இசைமிகு தமிழ்மொழியே! 5

என்றன் செந்தமிழ் என்றன் செந்தமிழ்
என்று மகிழ்வேனே!
என்தாய் மொழியென என்தாய் மொழியென
என்றும் புகழ்வேனே! 6

—திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

2. தமிழ் மொழி

1. ‘தமிழ்’ என்னும் சொல்லுக்கு ‘இனிமை’ என்பது பொருள். ‘மொழி’ என்னும் சொல், ‘பாஷை’ எனப் பொருள் படும். ஆகவே, ‘தமிழ் மொழி’ என்னும் தொடருக்கு ‘இனிமையான பாஷை’ என்பது பொருள். தமிழ் மொழி பேசும் நாம், ‘தமிழர்’ எனப்படுகிறோம். தமிழ் மொழி வழங்கும் நாடும் ‘தமிழ் நாடு’ என்றே வழங்கப்படுகிறது.

2. பண்டைக் காலத்தில் வடக்கே திருவேங்கடம், தெற்கே குமரிமுனை, கிழக்கிலும் மேற்கிலும் கடல்கள் ஆகிய எல்லைகளுக்கு உட்பட்ட நிலப்பரப்பு முழுவதும் தமிழ் மொழி வழங்கி வந்தது. தமிழ் நாட்டில் அக்காலத்தில் மூன்று பெரிய அரசுகள் இருந்தன. அவை சேர, சோழ, பாண்டிய இராச்சியங்கள். அந்த இராச்சியங்களை ஆண்டு வந்த மன்னர்கள் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் பெரி-தும் ஆதரித்து வந்தார்கள். அவர்கள் புலவர்களுக்கு அள-வற்ற பொருள்களை உதவினார்கள். அவர்களை ஒன்று கூட்டித் தமிழை வளர்த்தார்கள். அப்புலவர்களின் கூட்-டங்கள் ‘சங்கங்கள்’ எனப்பட்டன.

3. பாண்டி நாட்டில் மூன்று சங்கங்கள் இருந்தன. அவற்றுள் முதற் சங்கத்துக்கு அகத்திய முனிவர் தலைவரா-யிருந்தார். அச்சங்கத்தைச் சேர்ந்த புலவர்கள், பற்பல நூல்களை இயற்றினார்கள். ஆனால், அவை எல்லாம் அழிந்து போயின. இரண்டாம் சங்கத்துக்குத் தொல்காப்பியர் என்-பவர் தலைவராய் இருந்தார். அவர் அகத்தியருடைய மாணவர்களுள் ஒருவர். அவர் ‘தொல்காப்பியம்’ என்னும் ஓர் இலக்கண நூலைச் செய்தார். அது நமக்குக் கிடைத்-திருக்கிறது. அதைத் தவிர, இரண்டாம் சங்கத்து நூல்கள் யாவும் அழிந்துவிட்டன.

4. மூன்றும் சங்கத்துக்கு நக்கீரர் என்பவர் தலைவராயிருந்தார். அவரும், அவர் காலத்துப் புலவர்களும் எண்ணற்ற நூல்களை இயற்றினர்கள். அவற்றுட்சில மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. அவை சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. அவற்றைப் படித்தால், நாம் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ளலாம்.

5. தமிழ்மொழி தமிழ்நாட்டில் மட்டுமன்றி, இலங்கை, பர்மா, சுமத்திரா முதலிய நாடுகளிலும் வழங்கி வந்தது. இவ்வளவு பெருமையுள்ள தமிழ் மொழி, இக்காலத்தில் சிறந்த நிலையில் இல்லை. இதற்குக் காரணம், தமிழர்களாகிய நாம் அதனிடம் பற்றுடையவர்களாய் இல்லாமையே. நமக்கு ஆங்கிலம் முதலிய பிற மொழிகளின்மீது உள்ள அளவு விருப்பம் தமிழ்மொழியின்மீது இல்லை. அது பெருங்குற்றம். இனியாவது நாம் நம் குற்றத்தை உணர்ந்து, தமிழ் மொழியை நன்கு கற்றுத் தெளிய வேண்டும்.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. 'தமிழ் மொழி' என்னுந்தொடருக்குப் பொருள் யாது ?

ஆ. தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை ?

இ. 'சங்கங்கள்' என்பன யாவை ?

ஈ. முச்சங்கங்களின் தலைவர் யாவர் ?

உ. சங்கநூல்களிலிருந்து நாம் அறியக்கூடியவை யாவை ?

II. சொல்லியபடி செய் :—

அ. 'தமிழ்' என்னும் சொல்லுக்கு 'இனிமை' என்பது பொருள். ['இனிமை' என்னும் சொல்லுடன் வாக்கியத்தைத் தொடங்கு.]

ஆ. மன்னர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தார்கள் ; அவர்களுக்குப் பொருள் உதவினர்கள். [ஒரே வாக்கியமாக எழுது.]

இ. இக்காலத்தில் பெருமையுள்ள இவ்வளவு தமிழ் மொழி நிலையில் இல்லை சிறந்த [இச்சொற்களைக்கொண்டு வாக்கியம் அமைக்க.]

ஈ. சங்கத்துக்கு, ஆண்டுகளுக்கு [ஒவ்வொரு சொல்லிலும் உள்ள எழுத்துக்களைக்கொண்டு ஐந்து, ஐந்து சொற்கள் எழுதுக.]

இலக்கணம் :

வாக்கியம் :

1. பால் பார் குடிக்கிறது கன்றுக்குட்டி
2. கன்றுக்குட்டி பால் குடிக்கிறது பார்.

முதல் வரியில் உள்ள சொற்களின் தொகுதிக்கும், இரண்டாம் வரியில் உள்ள சொற்களின் தொகுதிக்கும் உள்ள வேற்றுமையைக் கவனி. முதல் தொகுதி பொருள் விளங்க அமைந்தில்லை ; இரண்டாந் தொகுதி பொருள் விளங்க அமைந்திருக்கிறது.

சொற்கள் தனித்தும் தொடர்ந்தும் நின்று பொருள் தருமாயின், வாக்கியமாம்.

விளையாட்டு—1

கீழே காணப்படும் சித்திரங்களுள் ஒவ்வோன்றிலும் ஒரு குறை இருக்கிறது. அதைக் கண்டுபிடி :



3. குரங்கும் குல்லாய் வியாபாரியும்

(கதைப் படம்)



இப்படங்களிலிருந்து நீ அறியும் கதையைக் கூறு, பிறகு அதை எழுது.





4. கைத்தொழில்கள்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே;
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே;
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே;
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே;
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே;
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்;
பிரம தேவன் கலையிங்கு நீரே.

மண்ணெ டுத்துக் குடங்கள்செய் வீரே;
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே;
உண்ணக் காய்கனி தந்திடு வீரே;
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே;
எண்ணெய் யில்நெய் கொணர்ந்திடு வீரே;
இழையை நூற்றுநல் ஆடைநெய்
[வீரே;
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்;
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே.

—திரு. சி. சுப்பிரமணிய பாரதியார்

5. தீக்குச்சி

1. நாகரிகம் மிக்க இக்காலத்தில் நாம் நெருப்பு உண்டாக்க வேண்டுமானல், ஒரு தீக்குச்சியைக் கிழித்து எளிதில் நெருப்பை உண்டாக்கிவிடுகின்றோம். ஆனல், நெருப்பின் உபயோகத்தையே மக்கள் அறியாதிருந்த ஒரு காலமும் இருந்தது. அங்ஙனமாயின், மாந்தர் நெருப்பின் பயனையும், அதை உண்டாக்கும் விதத்தையும் எவ்வாறு அறிந்தனர்? இவ்வினவுக்கு எவரும் திட்டமாக விடை கூற முடியாது; ஆயினும், ஒருவாறு விடையை ஊகிக்கக்கூடும்.

2. பண்டைக் காலத்தில் மக்கள், காடுகளிலும் மலைகளிலும் வசித்து வந்தார்கள். காடுகளில் மூங்கில் போன்ற மரங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து தீப்பிடிப்பதை அவர்கள் பார்த்திருக்கலாம். தங்களுக்கு வேண்டிய கருவிகளைச் செய்வதற்குக் கற்பாறைகளை உடைத்தபோது, அப்பாறைகள் ஒன்றோடொன்று மோதித் தீப்பொறி எழுவதையும் அவர்கள் கண்டிருக்கலாம். இந்த அனுபவத்தினாற்பெற்ற அறிவைக்கொண்டுதான் அக்காலத்து மக்கள் தீயுண்டாக்கி வந்தார்கள் என்பதை ஒருவாறு நிச்சயிக்கலாம்.

3. ஒரு நூற்றாண்டுக்கு முன் தீக்குச்சி உபயோகத்தில் இல்லை. அக்காலத்தில் மரத்துண்டு ஒன்றைத் தரையிலிட்டு அதன்மீது ஓர் உருளையைப் பொருத்திக் கடைந்து நெருப்பு உண்டாக்குவது வழக்கம். இதற்கு 'அரணி கடைதல்' என்பது பெயர். இதுவன்றி, 'சிகி முகி' என்னும் கற்களை ஒன்றோடொன்று மோதி, அக்கினியை உற்பத்தி செய்வதும் வழக்கமாய் இருந்து வந்தது.

4. பின்னர் ஓர் ஆங்கில அறிஞர் நெருப்புக்குச்சி செய்யும் முயற்சியை மேற்கொண்டார். அவர் நன்கு உலர்ந்த குச்சிகளைச் சீவி வைத்துக்கொண்டார்; ஒரு பாத்திரத்தில் கந்தகம் என்னும் வஸ்துவைக் கரைத்து வைத்தார்;



1. முதற்படத்தில் காணப்படுபவை மரத்துண்டுகள்.
2. இரண்டாம் படத்தில் அம்மரத்துண்டுகள் இயந்திரத்தில் பலகைகளாக அறுக்கப்படுகின்றன.
3. மூன்றும் படத்தில் அவை சிறு குச்சிகளாக அறுக்கப்படுகின்றன.
4. நான்காம் படத்தில் குச்சிகள் மருந்து தோய்க்கப்பட்டு அடுக்கப்படுகின்றன.

மற்றொரு பாத்திரத்தில் பாஸ்பரஸ் என்னும் ஒரு பொருளை வேறு சில பொருள்களோடு கலந்து வைத்தார்; சீவிய குச்சிகளின் முனைகளைக் கந்தகத் திரவத்தில் தோய்த்து உலர்த்தினர்; பிறகு, கந்தகம் தோய்த்த குச்சிகளின் தலைகளைப் பாஸ்பரஸ் திரவத்தில் தோய்த்துத் தீக்குச்சிகளாக்கினர். அக்குச்சிகள் சுரசுரப்பான எந்தப் பொருளின்மீது தேய்த்தாலும், தீப்பற்றும் தன்மையுடையவை. ஆதலால், அவை சில சமயங்களில் தாமே தீப்பற்றுவதும் உண்டு. அதனல், தீ விபத்துக்கள் ஏற்படலாயின.

5. அவ்விபத்துக்களை நீக்கப் பிற்காலத்தில் குச்சிகளைப் பாஸ்பரஸில் தோய்க்காமல், பாஸ்பரஸைப் பெட்டிகளின் பக்கங்களில் வேறு சில பொருள்களுடன் கலந்து தடவி, அவற்றின்மீது குச்சிகளைத் தேய்த்தால் நெருப்பு உண்டாகும்படி செய்தார்கள். இக்குச்சிகளை வேறு எந்தப் பொருளின்மீது தேய்த்தாலும் நெருப்புப் பற்றாது. இதனல், இவை 'தீங்கற்ற தீக்குச்சிகள்' என வழங்குகின்றன. இக்குச்சிகளையே நாம் இக்காலத்தில் உபயோகிக்கிறோம். மனிதன் அறிவும் ஆராய்ச்சியும் மாந்தருக்கு எவ்வளவு நன்மையைச் செய்துள்ளன என்பதைச் சிந்தித்துப் பார்!

6. இக்காலத்தில் தீக்குச்சித் தொழில் நமது நாட்டில் ஒரு குடிசைத் தொழிலாய் இருக்கிறது. சென்னையில் தண்டையார்பேட்டை, திருவொற்றியூர் என்னுமிடங்களில் தீக்குச்சித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. தென் ஜில்லாக்களில் சாத்தூர், சிவகாசி முதலிய இடங்களிலும் தீக்குச்சித் தொழில் பெரிதும் பரவியுள்ளது. இவ்வாறே பிற தொழில்களும் நமது நாட்டின் பல பாகங்களிலும் பரவுமாயின், மக்கள் வாழ்க்கை இனிதாகவும் எளிதாகவும் இருக்குமல்லவா?

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. பண்டைக்காலத்து மக்கள் எவ்வாறு நெருப்பு உண்டாகும் காரணத்தை அறிந்தார்கள் ?

ஆ. அவர்கள் எங்ஙனம் தீயுண்டாக்கினார்கள் ?

இ. முதன்முதல் தீக்குச்சி செய்தவர் யார் ? அவர் அதைச் செய்த முறை யாது ?

ஈ. ‘ தீங்கற்ற தீக்குச்சி ’ செய்ய நேரிட்ட அவசியம் என்ன ?

II. ‘ தீக்குச்சி ’ என்னும் சொல்லில் ஆரம்பித்து நான்கு வாக்கியங்கள் எழுது.

உதாரணம் : 1. தீக்குச்சி முற்காலத்தில் இல்லை.

2. தீக்குச்சி..............................

3. தீக்குச்சி..............................

4. தீக்குச்சி..............................

5. தீக்குச்சி..............................

III. நெருப்பு என்னும் சொல்லுக்கு இப்பாடத்தில் வந்துள்ள சொற்களையும், நீ அறிந்த பிற சொற்களையும் எழுது.

IV. எதிர்ப்பதங்கள் எழுது :—

பண்டைக்காலம், எளிது, மேற்கொண்டார், நீக்கி, தீங்கு, அறிவின்மை

விளையாட்டு—2

மணல்	மணல் மேடு	மீன் வலை
கழனி	குளம்	எருது
கருங்கல்	சுனை	யானை
கிளிஞ்சில்	தாழை	குப்பம்
நாற்று	விதை	வீடு
பாறை	தேன்	குரங்கு
அலை	சுறா மீன்	செம்படவர்
ஏற்றம்	கலப்பை	உழவு
காடு	பனிக்கட்டி	நீர்வீழ்ச்சி
உப்பு நீர்	கட்டுமரம்	குடிசை
ஏரி	வண்டி	கார்
ஆறு	சிகரம்	வேடர்

மேலே உள்ள சொற்களைக்கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய் :—

கடலும் கடல் சார்ந்த பொருள்களும்	மலையும் மலை சார்ந்த பொருள்களும்	வயலும் வயல் சார்ந்த பொருள்களும்

6. பொங்கல் விழா

1. தமிழ் மக்கள் கொண்டாடும் விழாக்களுள் மிக முக்கியமானது பொங்கல் விழா. இது மார்கழி மாதத்தின் கடைசி நாளிலும், தைம்மாதத்தின் முதல் மூன்று நாட்களிலும் கொண்டாடப்பெறுகிறது. இதற்குப் புராணங்கள் கூறும் காரணத்தை முதலில் கவனிப்போம் :

2. சூரியன் பூமத்திய ரேகைக்குத் தெற்கில் சஞ்சரிக்கும் நாட்களுக்குத் தட்சிணுயன காலம் என்பது பெயர்; பூமத்திய ரேகைக்கு வடக்கில் சஞ்சரிக்கும் நாட்கள் உத்தராயன காலம் எனப்படும். தட்சிணுயன காலம் தேவர்களுக்கு இரவுப் பொழுதென்றும், உத்தராயன காலம் பகற்பொழுதென்றும் நம் முன்னேர் கருதினர். ஆதித்தன் தட்சிணுயனத்தில் இருந்து உத்தராயனத்துக்கு மாறுகின்ற நாள் தைம்மாதம் முதல் தேதியாம். இந்த நாளே தேவர்களுக்கு இரவு கழிந்து பகல் தோன்றும் நாள். இந்நாளில் அதிகாலையில் தேவருலகத்தில் தேவேந்திரன் வெகு ஆடம்பரமாகக் கொலு வீற்றிருப்பான். அப்போது தேவர்கள் காணிக்கைகளுடன் வந்து அவனை வணங்கிச் செல்வார்களாம். அந்த ஆடம்பரமான விழாத்தான் பூவுலகத்தில் மக்களால் போகி எனக் கொண்டாடப்படுகிறதாம்.

3. ஆனல், இந்த விழாவுக்கு இஃது உண்மையான காரணம் அன்று; வேறு காரணமும் உண்டு. அதைக் கவனிப்போம் : 'போகி' என்பது இந்திரனுக்கு வழங்கும் பெயர். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதநிலம் என்பதும், அதற்குக் கடவுள் இந்திரன் என்பதும் தமிழர் கொள்கை. ஆகவே, உழுதுண்டு வாழும் தமிழர், உழுதொழிலுக்கு இறைவனுகிய போகி என்னும் இந்திரனை வணங்கி வருகின்றனர். இதனுற்றான் அவ்விழாவிற்குப் 'போகி பண்டிகை' என்னும் பெயர் வழங்குகிறது. போகி பண்டிகையன்று

வீட்டில் உள்ள பயனற்ற மிகப் பழைய பாண்டங்களையும், தட்டுமுட்டுச் சாமான்களையும் எறிந்துவிட்டுப் புதிய பொருள்களைக் கொள்வது வழக்கம். அன்று விடியற்காலை வீட்டின் புறத்தே தீ மூட்டி, அதைச் சூழச் சிறுவர் சிறுமியர் இருந்து பறைகொட்டிப் பாடிக் களிப்பதும் வழக்கம்.

4. போகி பண்டிகைக்கு மறுநாள், அதாவது தைம் மாதம் முதல் தேதியன்று, பொங்கலிட்டுச் சூரியனைப் பூசிப்பது வழக்கம். இதுவே பொங்கல் விழா. இவ்விழாவிற்கு 'மகர சங்கராந்தி' என்பது வடமொழிப் பெயர். இச்சூரிய பூசைக்குக் காரணம் என்ன? உலகில் உள்ள மக்களின் வாழ்க்கைக்கு மூலகாரணமாயிருப்பது தானிய விளைவே; அவ்விளைவுக்கு மழையே ஆதாரம்; மழைக்குக் காரணமானவன் சூரியன். ஆதலால், உழுதொழிலை மேற்கொண்ட பண்டைத் தமிழ் மக்கள், மகர சங்கராந்தி தேவனாகிய சூரியனை மருதநிலக் கடவுளாகிய இந்திரனுக்கு அடுத்த படியாகப் பூசிக்கும் வழக்கத்தை மேற்கொண்டார்கள்.

5. பொங்கல் தினத்துக்கு முன்னதாகவே தமிழர் தம் வீடுகளைச் சுத்தம் செய்து, சுண்ணம் பூசி, செம்மண் கோடுகளிட்டு அழகு செய்வார்கள். பொங்கல் தினத்தன்று பெண்டிர் வீட்டின் முற்றத்தை மெழுகி, மாக்கோலமிட்டு, செம்மண் பட்டை தீட்டி, அலங்கரிப்பர். அம்முற்றத்தின் ஒரு பாகத்தில் களிமண்ணால் சிற்றில் அமைத்து, அதன் இடையில் பிள்ளையாரை அமைப்பார்கள். அவர் முன்னர்த் தைம்மாதத்தில் புதியவையாகக் கிடைக்கும் காய்கனி கிழங்குகளையும், நெற்கதிர்களையும், கரும்பு பசுமஞ்சட்கொத்து முதலியவைகளையும் பரப்பிப் பூசை புரிவார்கள்.

6. பிறகு முற்றத்தில் மூன்று புதுப் பானைகளை வைத்துப் பொங்கல் இடுவார்கள். உலை நீர் பொங்கிவரும்போது அதில் பாலைப்பெய்து, 'பொங்கலோ பொங்கல்!' என்று கூவி, மகிழ்வார்கள். அன்று மாலை ஆலயங்களுக்குச் சென்று ஆண்டவனை வணங்கி ஆனந்திப்பார்கள்.

7. தைம்மாதம் இரண்டாந்தேதியன்று மாட்டுப் பொங்கல் விழாக்கொண்டாடப் பெறும். அன்று உழவுக்கு இன்றியமையாத எருதுகளுக்கும், வீட்டுக்குப் பால் உதவும் பசுக்களுக்கும் அலங்காரம் செய்து, பொங்கல் முதலிய உணவுப் பொருள்களை அளித்து, அவற்றைக் களிக்கச் செய்வார்கள். தைம்மாதம் மூன்றுந்தேதியன்று உழவுத் தொழிலுக்கு எதிர்காலத்தில் உதவக்கூடிய கன்றுகளுக்குப் பொங்கலிடுவார்கள். இது பெரும்பாலும் சிறுவர் சிறுமியரால் கொண்டாடப்படுவது வழக்கம். இவ்விழா, கன்று பொங்கல் எனப்படும். அன்றைய தினத்தில் சிறியவர்கள் பெரியவர்களைக்கண்டு ஆசி பெறுவதும், வேலையாட்கள் எசமானர்களைக்கண்டு பரிசு பெறுவதும் வழக்கம். இக்காரணத்தால் இதைக் 'காணும் பொங்கல்' என்று கூறுவதும் உண்டு.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. போகி, பொங்கல் விழாக்களைப்பற்றிப் புராணங்கள் கூறும் கதை யாது ?

ஆ. 'மருத நிலம்' என்பது எது ? அதன் கடவுள் யார் ?

இ. போகி பண்டிகை ஏன் கொண்டாடப்படுகிறது ?

ஈ. அஃது எவ்வாறு கொண்டாடப்படுகிறது ?

உ. பொங்கல் விழா எவ்வாறு கொண்டாடப்படுகிறது ?

ஊ. அதற்கு அப்பெயர் வழங்கக் காரணம் என்ன ?

எ. மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுவது ஏன் ?

II. இப்பாடத்தில் சூரியன், சந்தோஷம் என்னும் பொருளில் வந்துள்ள பிற சொற்களை எடுத்தெழுது.

III. வாக்கியங்களில் அமை :—

விழா, சஞ்சரி, கருது, அதிகாலை, காணிக்கை, ஆடம்பரம், உழுதொழில், மேற்கொள், எதிர்காலம், பரிசு

7. தஞ்சை நகரம்

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரள்வெள் ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையாம்;—வடதிசையில்
ஏணாட்டுப் பெண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்."

என்னும் பாட்டால் சோழ நாட்டின் எல்லைகளை நாம் அறி-கிறோம். சோழ நாட்டையாண்ட மன்னர்கள், வெவ்வேறு



காலத்தில் வெவ்வேறு பட்டணத்தைத் தலைநகரமாக்கிக்-கொண்டு ஆட்சிபுரிந்தார்கள்.

2. முதலில் உறையூரும், பின்னர்ப் புகாரும் சோழ நாட்டின் தலைநகரங்களாய் இருந்தன. பிற்காலத்துச்

சோழர்கள், திருவாரூரைத் தங்கள் தலைநகரமாகக் கொண்டார்கள். அவர்களுள் விஜயாலய சோழர் என்பவர் ஒருவர். அவர் அக்காலத்தில் பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தஞ்சாவூரைக் கைப்பற்றித் தமது இரண்டாம் தலைநகரமாக்கிக்கொண்டார். நாளடைவில் அது முன்னேற்றமடைந்து, பெரிய நகரமாயிற்று.

3. விஜயாலயருடைய வமிசத்தைச் சேர்ந்த இராசராச சோழர் தஞ்சாவூரையே தமது தலைநகராகக் கொண்டு ஆட்சி புரியத் தொடங்கினர். அவர் அங்கு ஓர் அரண்மனையை அமைத்துக்கொண்டு, அதன் அருகிலேயே, இக்காலத்தில் 'பெரிய கோவில்' என வழங்கும் பிரகதீசுவரர் ஆலயத்தைக் கட்டுவித்தார்; மாளிகையையும் கோவிலையும் உயர்ந்த சுவர்களாலும், ஆழ்ந்த அகழிகளாலும் அரண் செய்தார். இவற்றின் சின்னங்கள் இக்காலத்தும் அங்குக் காட்சியளிக்கின்றன. தஞ்சை நகரமும் கோட்டை மதில்களுக்குள்ளேயே அமைந்திருந்தது.

4. இராசராசரால் எடுப்பிக்கப்பட்ட பெரிய கோவில் அதன் பெயருக்கேற்ப அமைந்துள்ளமை ஆராயத் தக்கது. கோவிலும் பெரியது; அதன் கோபுரமும் பெரியது; உள்ளே இருக்கும் இலிங்கமும் பெரியது; அதன் திருமுன்னர் உள்ள நந்தியும் பெரியது; அன்றியும், இறைவருக்கு வழங்கும் தஞ்சைப் பெருவுடையார் என்னும் பெயரும், அம்மையாருக்கு வழங்கும் பெரிய நாயகியார் என்னும் பெயரும் கோவிலுக்கு வழங்கும் பெயருக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன.

5. இலிங்கம் இருக்கும் உள்ளிடத்துக்கு மேலே கட்டப்பட்டுள்ள கோபுரம் மிகவும் விசித்திரமானது. அது தன் நிழல் பூமியில் விழாதபடி அடியகன்று, நுனி சிறுத்து, நாற்சதுர வடிவமாய் அமைந்துள்ளது. அதன் நான்கு மூலைகளிலும், மூலைக்கொன்றாக நான்கு மானிட உருவங்கள்

காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று ஐரோப்பியன் உருவமாயமைந்திருப்பது, நம்மை வியக்கச் செய்கிறது.

6. அதைப்பற்றிப் பல ஆராய்ச்சிகள் எழுகின்றன. சிற்பி தன்னையறியாமலே அதை அமைத்திருக்கக் கூடும் என்கின்றனர் சிலர். சில நூற்றாண்டுகட்குப் பின்னர் ஐரோப்பியர் நம் நாட்டுக்கு வருவர் என்பதை உணர்ந்து அதற்கு அறிகுறியாகவே அஃது அமைக்கப்பட்டது என்பர் சிலர். பண்டைக் காலத்திலிருந்தே நமது நாட்டுக்கும், ஐரோப்பாவுக்கும் வாணிகம் நடந்து வந்தமையால், ஐரோப்பிய உருவத்தைச் சிருஷ்டித்ததில் வியப்பொன்று-மில்லை என்பர் சிலர்.

7. சோழ மன்னர்களுக்குப் பிறகு தஞ்சை, சாளுக்கிய மன்னரின் ஆட்சியில் வந்தது. அதன் பின்னர் விஜய-நகரத்து மன்னர்கள் அதைக் கைப்பற்றினர்கள்.

8. சிறிது காலத்துக்குப் பிறகு சிவாஜி என்னும் மகா-ராஷ்டிர மன்னர் தஞ்சாவூரைக் கைப்பற்றித் தம் தமையனு-ரான ஏகோஜி என்பவரை அதற்கு அரசராக நியமித்தார். மகாராஷ்டிர மன்னர்களுள் கடைசியாய் அதை ஆண்டவர் சரபோஜி மன்னர். அவரிடமிருந்துதான் ஆங்கிலேயர் அதைக் கைப்பற்றினர்.

9. மகாராஷ்டிரர் காலத்தில் கட்டப்பட்ட அரண்-மனை, இக்காலத்தில் பொலிவிழந்து காணப்படுகிறது. அதனுள் சிறந்த நூல்நிலையம் ஒன்று இருக்கிறது. அதற்-குச் 'சரஸ்வதி மகால்' என்பது பெயர். அரண்மனையின் உட்பாகம் மிகவும் நேர்த்தியாய்க் காணப்படுகிறது. அழகிய ஒரு மண்டபத்தின் இடையில் சலவைக் கல்லால் செய்யப்-பட்ட சரபோஜி மன்னரின் உருவச்சிலை இருக்கின்றது. தஞ்சை நகரம் இக்காலத்திலும் பாழ்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. சோழ நாட்டின் எல்லைகள் எவை ?

ஆ. எவ்வெப்பட்டணங்கள் சோழ மன்னர்களின் தலைநகரங்களாயிருந்தன ?

இ. தஞ்சாவூரைத் தலைநகராக்கிக்கொண்டவர் யார் ?

ஈ. தஞ்சைப் பெரிய கோவிலுக்கு அப்பெயர் எவ்வெவ்வகைகளில் பொருந்தியுள்ளது ?

உ. பெரிய கோவிலின் சிறப்பியல்புகள் யாவை ?

ஊ. தஞ்சாவூரைப் பிற்காலத்தில் ஆண்ட அரசர் யாவர் ?

II. வாக்கியங்களில் அமை :—

எல்லை, ஆட்சி புரிந்தார், கைப்பற்றினர், முன்னேற்றம், தொடங்கு, சின்னம், விசித்திரமானது, ஆராய்ச்சி

III. முடித்துக் காட்டு :—

அ. நான் கடைக்குப் போனேன்.

ஆ. நீ கடைக்குப் ———.

இ. அவன் கடைக்குப் ———.

ஈ. அவள் கடைக்குப் ———.

உ. அது காட்டுக்குப் ———.

ஊ. அவர்கள் காட்டுக்குப் ———.

எ. அவைகள் காட்டுக்குப் ———.

8. இமாலய ஏற்றம்

1. இக்காலத்தில் மக்கள் புகழை விரும்பிச் செய்யும் செயல்கள் பல. சிலர், கல்வி கற்றுப் பெரும்புலவராகிப் புகழ் அடைகின்றனர். சிலர், இராணுவத் தலைவராய்க் கீர்த்தியைப் பெறுகின்றனர். சிலர், அரிய விஞ்ஞானத்தில் தேர்ச்சியடைந்து புகழ் அடைகின்றனர். சிலர், துணிகரச் செயல்களைச் செய்து, பெயர் தேடிக்கொள்கின்றனர்.

2. உலகில் மக்கள் புரிந்து வரும் துணிகரச்செயல்கள் பல. கண்டும் கேட்டும் அறியாத கடல்களைக் கடந்து, புதிய நாடுகளைக் கண்டுபிடித்தவர் சிலர். எவரும் கண்டறிய முடியாத ஆப்பிரிக்காவின் காடுகள் நிறைந்த பிரதேசங்களையும், அமெரிக்காக் கண்டங்களின் உட்பிரதேசங்களையும், ஆஸ்திரேலியாக் கண்டத்தின் இயற்கை அற்புதங்களையும் பலர் ஆராய்ந்தனர். பனி உறைந்து கிடக்கும் துருவப் பிரதேசங்களும் துணிகரம் மிக்க வீரர்-

களால் கண்டறியப்பட்டன. அவ்வாறே நமது நாட்டின் வடவெல்லையாய் உள்ள இமாலயத்தின் சிகரங்களுள் மிக உயர்ந்ததான எவரெஸ்டு சிகரத்தின் உச்சியை அடையப் பலர் முயற்சி செய்திருக்கின்றனர்.

3. 'இமாலயம்' என்னும் தொடருக்குப் 'பனியின் இருப்பிடம்' என்பது பொருள். இமயமலைகள் கிழக்கு மேற்கில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு மைல் வரையில் வியாபித்துள்ளன. இவற்றின் அகலம், சுமார் நூற்றைம்பது மைல். இம்மலைகள் மிக உயர்ந்தவை. இவற்றின் இடையில் பயங்கரமான பள்ளத்தாக்குகள் பல உண்டு. அச்சத்தை விளைவிக்கக்கூடிய வான் அளாவிய உயர்ந்த மலைகளும் பல உண்டு. அவற்றின் மீது எப்போதும் பனி உறைந்து கிடக்கும். அவற்றுள் சில செங்குத்து அளவில் சுமார் ஐந்து மைல் உயரம் உள்ளன.

4. அவற்றின்மீது ஏறிச் சென்று அவற்றின் உச்சியை அடையச் சில ஆண்டுகளாக முயற்சி செய்தவர் பலர். இம்முயற்சியில் ஈடுபடுகின்றவர்களுக்கெனத் தனிச் சங்கங்களும் ஐரோப்பிய நாடுகளில் அமைக்கப்பெற்றுள்ளன.

5. இமாலய ஏற்றத்தால் ஏற்படும் துன்பங்கள் எண்ணற்றவை; மேலே செல்லச் செல்லக் குளிர் மிகக் கடுமையாய் இருக்கும். அதை மனிதர் தாங்குவது எளிதன்று. அதைத் தாங்குவதற்-

கென்த் தயாரிக்கப்பட்ட உடைகளை உடுத்துச் செல்ல வேண்டும். மேலே ஏறிக்கொண்டிருக்கும்போதே, சில இடங்களில்பூமியின்மீது உறைந்திருக்கும் பாறைகள் பிளக்கும்; சில சமயங்களில் மலைமேலிருந்து பாறைகள் உருண்டு வரும். மேலே செல்லச் செல்ல, மூச்சுத் திணற ஆரம்பிக்கும். கைகால்கள் உணர்வின்றி மரம் போல மரத்துவிடும். உதடு, மூக்கு முதலியவை வெடிப்பதால் தாங்க முடியாத வலியுண்டாகும். சில சமயங்களில் நடக்கும்போதே உறக்கம் வரும். உறங்கினல், அப்படியே இறக்க நேரிடும்.

6. இவையன்றி, பின்னும் பல கஷ்டங்களும் உண்டு: யாத்திரிகர் தமது யாத்திரைக்கு வேண்டும் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்ல வேண்டும்; இரவிலும் பகலிலும் தங்கியிருப்பதற்குக் கூடாரங்கள் வேண்டும்; புகைப்படம் எடுப்பதற்குக் 'காமிரா', சமையல் செய்வதற்கு 'ஸ்டவ்' எனப்படும் மண் எண்ணெய் அடுப்பு முதலிய பலவகையான சாமான்களைக் கொண்டு செல்ல வேண்டும். இவற்றையெல்லாம் சுமந்து செல்லக் கூலியாட்களையும், இமயமலைப் பிரதேசத்தில் வெகுவாகச் சஞ்சரித்துப் பல பாகங்களையும் நன்கறிந்த வழிகாட்டிகளையும் அழைத்துச் செல்ல வேண்டும்.

7. இத்தனை முன்னேற்பாடுகளுடன் சென்றாலும், யாத்திரிகர் மேற்கொண்ட காரியம் எளிதில் கைகூடும் என்று கூறுவதற்கில்லை. சில சமயங்களில் இமாலய ஏற்றத்தை மேற்கொண்ட கூட்டத்தாரில் இருவர் மூவரே உயிருடன் வெற்றியின்றித் திரும்பியுள்ளனர். மற்றவர் தாம் மேற்கொண்ட செயலால் தம் உயிரை இழந்து, அழியாப் புகழைத் தேடிக்கொள்வர்.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. மாந்தர் எவ்வெவ்வகைகளில் புகழை அடைகின்றனர்?

ஆ. மக்கள் புரிந்த துணிகரச் செயல்களுள் மூன்றைக் கூறு.

இ. 'இமாலயம்' என்னும் தொடருக்குப் பொருள் யாது?

ஈ. இமாலய ஏற்றத்தில் ஏற்படக்கூடிய கஷ்டங்கள் யாவை?

உ. இமாலயத்தின்மீது ஏற விரும்புபவர்க்குரிய முன்னேற்பாடுகள் யாவை?

II. இப்பாடத்தில் 'புகழ்,' 'பெறுகின்றனர்' என்னும் சொற்களின் பொருளை உடைய வேறு சொற்கள் எவை?

III. கீழ் வரும் வாக்கியங்களை வினாக்களாக மாற்றி எழுது:—

1. மக்கள் புகழை விரும்பி மேற்கொள்ளும் செயல்கள் பல.

2. கடல்களைக் கடந்து சென்று பலர் புதிய நாடுகளைக் கண்டுபிடித்தனர்.

3. ஆஸ்திரேலியாக் கண்டத்தின் இயற்கை அற்புதங்களைப் பலர் ஆராய்ந்தனர்.

IV. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களைப் பன்மையாக்கி வாக்கியங்களை எழுது:—

1. மனிதன் புதிய நாட்டைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கிறான்.

2. அரிய செயலைச் செய்ய எவனுக்கும் விருப்பம் உண்டு.

3. இமயமலையின்மீது உயர்ந்த மரமும் பனிப்பாறையும் உண்டு.

9. ஊன் உண்ணும் செடிகள்

1. விலங்குகளுள் சில, தாவரங்களைத் தின்று வாழ்கின்றன என்பதை நீ அறிவாய். தாவரங்களுள் சில, ஊன் உண்டு வாழ்கின்றன என்று கூறினால், அஃது உனக்கு விந்தையாய் இருக்கும்! சில செடிகள், சிறு பூச்சிகளைத் தின்று உயிர் வாழ்கின்றன. இதற்கேற்ற அமைப்பை இறைவர் அச்செடிகளுக்கு அளித்துள்ளார். அவற்றுள் சில செடிகளைப்பற்றி இப்பாடத்தில் படிப்போம் :

2. சன்டியூ (Sundew) என்னும் செடி ஊன் உண்ணும் செடிகளுள் ஒன்று. அஃது எல்லா நாடுகளிலும் உண்டு. அது நமது நாட்டில் வங்காளத்தில் காணப்படுகிறது. அதன் வேர்கள் மிகச் சிறியவை. ஒவ்வொரு செடியிலும் ஐந்து அல்லது ஆறு இலைகள் ரோஜா மலரின் இதழ்கள் அமைந்திருப்பதுபோலத் தரையின் அருகில் இருக்கும். அவ்விலைகள் சிறிது குழிந்து அகப்பை போலக் காணப்படும். இலையின் உட்புறத்தில் குண்டுசியின் தலை போன்ற சிறு குமிழ்களை உடைய சுமார் இருநூறு சிலும்புகள் உண்டு. இச்சிலும்புகளின் குமிழ்கள் இரசம் சுரக்கக் கூடியவை. இரசம் சூரிய வெளிச்சத்தில் பிரகாசிக்கக்கூடியது ; பூச்சிகளைக் கவரக்கூடிய நிறமுள்ளது. சிலும்புகளுள் இலையின் மத்திய பாகத்தில் உள்ளவை குட்டையாயும், ஓரத்தில் உள்ளவை நீண்டுமிருக்கும். அன்றியும், இச்சிலும்புகளின்மீது எந்தப் பொருள் பட்டாலும், இவை உடனே உட்புறம் மடியும் தன்மை உடையவை. ஆதலால், இலையின் மத்தியிலோ, அன்றி ஓரத்தில் உள்ள சிலும்புகளின் மீதோ, ஏதேனும் பூச்சி ஏறி வருமாயின், அதன் மீது சிலும்புகள் எல்லாம் கவிந்துகொள்வதால், அப்பூச்சி அவற்றில் அகப்பட்டுச் சாகும். உடனே சிலும்புகளின் கொண்டைகளிலிருந்து இரசம் சுரக்கிறது. அஃது இறந்த பூச்சியைக் கரையும்படி செய்-

கிறது. பூச்சி கரைந்து ஜீரணிக்கப்பட்ட பிறகு, சிலும்புகள் பழையபடி நிமிர்ந்து நிற்கும்.

3. நெபந்திஸ் (Nepenthes) என்பது ஊன் உண்ணும் செடிகளுள் மற்றொன்று. இதை ஜாடிச் செடி என்று அயல் நாடுகளில் வழங்குகின்றனர். இது நமது நாட்டில் திருவிதாங்கூரிலும், இலங்கையிலும் காணப்படுகிறது. இச்செடியின் நடு நரம்பு, கம்பி போல நீண்டு, முனையில் ஒரு ஜாடியைத் தாங்கி நிற்கிறது. அதற்கு ஒரு மூடி இருக்கும். இந்த ஜாடி, பகட்டான நிறமுடையது; இதனுள் ஒரு வகை இரசம் சுரக்கிறது; இந்த இரசம் சிறு ஜந்துக்களின் உடலைக் கரைக்கும் தன்மையுடையது. ஜாடியின் விளிம்பு பளபளப்பாயும், உட்பக்கம் கீழ் நோக்கிய பற்களைப் பெற்றும் இருக்கும். விளிம்பிலும் இரசம் சுரந்து, ஜாடியினுள் வழியும். வர்ணங்களால் ஈர்க்கப்படும் பூச்சி, விளிம்பை அடைந்து, அங்கிருந்து நழுவி, ஜாடியினுள் விழுந்து மடியும். இந்த ஜாடி ஓர் அங்குல நீளம் முதல் ஓர் அடி நீளம் வரையில் இருக்கும். ஆதலால், மிகச்சிறு பறவைகூட ஜாடியினுள்ளே விழுந்துவிட்டால் மேலே வர முடியாமல் இறந்துவிடும்.



1. நரம்பு 2. ஜாடியின் மூடி
3. விளிம்பு 4. ஜாடி

4. டார்லிங்டோனியா (Darlingtonia) என்பது ஒரு விநோதச் செடி. இது வட அமெரிக்காவில் உள்ள காலிபோர்னியாவில் காணப்படுகிறது. இச்செடியின் இலையும், இலைத்தண்டும் ஊதுகுழல் போல அமைந்துள்ளன. ஒவ்வோர் இலையின் நுனியிலும் ஒரு கொண்டை இருக்கிறது.

இது மழை நீர் தண்டுக்குள் செல்லாதபடி காக்கிறது. கொண்டையின் முன்புறத்தில் மீசை போன்ற ஒரு வஸ்து இருப்பதைக் காணலாம். இப்பொருளும் கொண்டையும், நீலம், சிவப்பு முதலிய நிறங்களையுடைய நரம்புகளைப் பெற்றுள்ளன. கொண்டையின் கீழ் உள்ள துவாரத்தின் விளிம்பில் தேன் கசிந்துகொண்டிருக்கும். பறக்கும் பூச்சிகள் கொண்டையின்மீது உட்கார்ந்து, தேனைப் பருகிக்கொண்டே இலையின் தண்டினுள் நுழைந்துவிடும். நுழைந்த ஜந்துக்கள் வெளியேற முடியாதபடி, தண்டின் உட்பாகத்தில் கீழ்நோக்கியுள்ள முட்கள் அவற்றைத் தடுக்கின்றன. ஆகவே, பூச்சிகள் சிறைப்பட்டு மாள்கின்றன.

5. டையோனியா (Dionea) என்பது ஊன் உண்ணும் ஒருவகைச் செடி. இது அமெரிக்காவின் கிழக்குப் பகுதிகளில் காணப்படுகிறது. இதன் இலை இரண்டாய்ப் பிரிந்



திருக்கும். இலையின் விளிம்பில் கூரிய சிலும்புகள் உள்ளன. இந்தச் சிலும்புகளுள் ஒன்றைத் தொட்டாற்கூட இலையின்

இரண்டு பிரிவுகளும் புத்தகம் மூடப்படுவது போல மூடிக்கொள்ளும். அப்போது விளிம்பில் உள்ள சிலும்புகள் ஒன்றோடொன்று கோத்துக்கொள்ளும். உடனே இலையின் உட்புறத்திலிருந்து ஒரு வகையான இரசம் ஊறும். இதன் உதவியால் பிடிபட்ட சிறு ஜந்துக்கள் கரையும். அவை முற்றிலும் கரைந்த பிறகு இலைகள் பழையபடி திறந்து நின்று, பூச்சிகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும். இத்தகைய விசித்திரமான செடிகள் இன்னும் எத்தனையோ உண்டு என்று அறிஞர் கூறுகின்றனர்.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. ஊன் உண்ணும் செடிகள் இரண்டின் பெயர்களை எழுது.

ஆ. சன்டியூவின் அமைப்பு எவ்வாறு இருக்கும் ?

இ. ஜாடிச் செடிக்கு வழங்கும் வேறு பெயர் யாது ? அது சிறு ஜந்துக்களைப் பற்றிக்கொள்வதற்கு ஏற்றவாறு அமைந்திருப்பது எங்ஙனம் ?

ஈ. டார்லிங்டோனியாவின் உள்ளே செல்லும் பூச்சிகளால் ஏன் வெளியே வர முடிவதில்லை ?

உ. டையோனியா, பூச்சிகளை எப்படிப்பிடித்துக்கொள்கிறது?

II. பொருள் எழுது :—

விலங்கு, தாவரம், ஊன், விந்தை, இறைவன், கவர, பிரகாசம், அறிஞர்

III. எதிர்ப்பதம் எழுது :—

வாழ்கின்றன, அருகில், வெளிச்சம், குட்டை, நீண்டு, உடையவை, குனிந்து, முனை, உட்பக்கம், ஈர்க்கப்பட்டு, முன்புறம், திறந்து

IV. முடித்துக் காட்டு :—

அ. இராமன் சீதையைக்————

ஆ. இராமன் சீதையால்————

இ. இராமன் சீதைக்கு————

ஈ. இராமனில் சீதை————

உ. இராமனுடன் சீதை————

ஊ. இராமன் மனைவி————

V. இப்பாடத்தில் 'இறத்தல்' என்னும் பொருளில் வந்துள்ள சொற்களை எடுத்தெழுது.

10. ஆறு

(பாட்டு)

கல்லும் மலையும் குதித்துவந் தேன்;பெருங்
காடுஞ் செடியுங் கடந்துவந்தேன் ;
எல்லை விரிந்த சமவெளி எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடிவந் தேன்;அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன் ;
திட்டுந் திடர்களும் சுற்றிவந் தேன்;மடைச்
சிப்புகள் மோதித் திறந்துவந்தேன். 2

காயும் நிலத்தழல் ஆற்றிவந் தேன்;அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன் ;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந் தேன்;அங்கென்
ஆசைதீ ரவிளை யாடிவந்தேன். 3

ஏறாத மேடுகள் ஏறிவந் தேன்;பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன் ;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந் தேன்;மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 4

ஆயிரம் காலால் நடந்துவந் தேன்;நன்செய்
அத்தனை யும்சுற்றிப் பார்த்துவந்தேன் ;
நேயமு றப்புன்செய்க் காட்டிலும் அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன். 5

அல்லும் பகலும் அலைந்துவந் தேன்;எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன் ;
நில்லும் எனக்கினி நேரமில் லைஇன்னும்
நீண்ட வழிபோக வேண்டும்அம்மா ! 6

—திரு. கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்

விளையாட்டு—3

கமலா :—விமலா, விசாலி, சரஸா, எல்லாரும் வாருங்கள். இன்றைக்கு ஒரு புதிய விளையாட்டு விளையாடலாம்.

விமலா :—அது என்ன விளையாட்டு?

கமலா :—நான் ஒரு வார்த்தை சொல்லுவேன். அதைக் கடைசியில் வைத்து ஓர் ஊரின் பெயரைச் சொல்ல வேண்டும்.

சரஸா :—அது எப்படி? எனக்கு விளங்கவில்லையே?

கமலா :—சொல்கிறேன்; கேள்: நான் 'புரம்' என்று சொல்கிறேன். நீ அச்சொல் கடைசியில் வரும்படி ஓர் ஊர் பெயர் சொல்ல வேண்டும்.

சரஸா :—தெரிந்தது. 'காஞ்சீபுரம்'—இம்மாதிரிதானே?

கமலா :—ஆம். அப்படித்தான். சொல்லட்டுமா? பாளையம்.

விசாலி :—மேட்டுப்பாளையம்.

விமலா :—இராசபாளையம்.

சரஸா :—வண்டிப்பாளையம்.

கமலா :—சரி, வேறு வார்த்தை சொல்கிறேன். கோட்டை.

சரஸா :—பாளையங்கோட்டை.

விமலா :—தேவகோட்டை.

விசாலி :—அருப்புக்கோட்டை.

கமலா :—சரி, நிறுத்துங்கள். வேறு வார்த்தை சொல்கிறேன். மங்கலம்.

விமலா :—கண்ணமங்கலம்.

விசாலி :—சேந்தமங்கலம்.

சரஸா :—கொத்தமங்கலம்.

கமலா :—சரி, வேறு வார்த்தை சொல்கிறேன் ; கிரி.

சாரதா :—வேங்கடகிரி.

சரஸா :—கிருஷ்ணகிரி.

விமலா :—இரத்தினகிரி.

கமலா :—நிறுத்துங்கள். வேறு வார்த்தை கூறுகிறேன் ; பேட்டை.

சரோஜனி :—சுருளூர்ப் பேட்டை.

விமலா :—இராணிப் பேட்டை.

சாரதா :—வாலாஜாப் பேட்டை.

கமலா :—நிறுத்துங்கள். வேறு சொல்கிறேன். புரி.

சரஸா :—தருமபுரி.

விமலா :—ஜோதிபுரி.

சாரதா :—மருங்காபுரி.

கமலா :—போதும். வேறு சொல், ஈஸ்வரம்.

சரஸா :—இராமேஸ்வரம்.

சாரதா :—மகாபலேஸ்வரம்.

விமலா :—திருநாகேஸ்வரம்.

கமலா :—போதும். இன்று இதோடு நிறுத்திக்கொள்வோம்.

11. ஒட்டகம் தோற்றுவிக்கப்பட்டது ஏன்?

1. எங்கும் நிறைந்தவரும், எல்லாம் வல்லவருமான இறைவர் இவ்வுலகத்தைப் படைத்தார். மனிதன், விலங்கு, பறவை முதலிய ஜீவராசிகளேயும் தாவரங்களேயும் படைத்து, உலகத்தைக் கவினுறச் செய்தார்.

2. இவ்வாறு படைக்கப்பட்ட சீவராசிகளுள் குதிரையும் ஒன்று. அஃது ஒரு நாள் தன் உருவத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தது. ஆயினும், தன் உறுப்புக்களின் அமைப்பில் சில குறைகள் இருந்ததாக அது கருதியது.

3. உடனே அப்புரவி, இறைவர் முன் சென்று "எம்பெருமானே, உலகை அலங்கரிக்க நீவிர் உதவிய உயிர்களுள் ஒன்ருய் இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தமை பற்றி உவகை அடைகிறேன்! ஆயினும், என் உறுப்புக்களின் அமைப்பில் சிற்சில மாறுதல்கள் இருந்திருந்தால், என் தோற்றம் மேலும் எழிலாய் விளங்கும் என்று எண்ணுகிறேன். நீவிர் திருவருள் புரியவேண்டும்," என்றது.

4. அது கேட்ட அண்ணல், "அசுவமே, நீ விரும்பும் மாறுதல்கள் யாவை? அஞ்சாமற்கூறுக! அவ்வாறே அருள் செய்வோம்!" என்ருர்.

5. அம்மொழிகளேக் கேட்ட பரி ஆனந்தமடைந்து, "கடவுளே, என் கால்கள் இன்னுஞ் சிறிது நீண்டும் மெலிந்தும் இருக்குமாயின், யான் இன்னும் விரைவாக ஓடக்கூடுமல்லவா? அன்னப் பறவைக்கு இருப்பது போல என் கழுத்து மேலும் நீண்டு மெலிந்து வளேந்திருந்தால், யான் எவ்வளவு அழகாய் விளங்குவேன்! அன்றியும், எனது மார்பும் சிறிது அகன்று முன்புறம் புடைத்திருந்தால்,

யான் மேலும் பலமடைந்து இருப்பேன் அல்லவா? கருணைக்கடலே, உம் அன்பர்கள் அமர்ந்து செல்லத் தகுதியாகச் சேணம் ஒன்றை என் முதுகில் தோற்றுவித்தால் அது சாலச் சிறப்பாய் இருக்கும் என்பது என் கருத்து,'' என்றது.

6. துரகம் உரைத்த அவ்வுரை கேட்ட அண்ணல், அப்போதே அது விரும்பிய மாறுதல்களோடு ஒரு விலங்கைத் தோற்றுவித்தார். அதுதான் இக்காலத்தில் 'ஒட்டகம்' என வழங்கப்படுவது. அம்மிருகத்தைக் கண்ட குதிரையின் உடல் பயத்தால் நடுங்கிற்று.

7. இறைவர், "பரியே, நீ விரும்பிய வகையில் உறுப்புக்களை அமைத்து யாம் உற்பத்திசெய்துள்ள இம்மிருகத்தை ஊன்றிப் பார். உனக்கு விருப்பமிருந்தால், உன் உருவத்தையும் இவ்வாறே இதோ ஒரு விநாடியில் மாற்றியமைக்கத் தடை இல்லை,'' என்றார்.

8. ஒட்டகத்தைக் கண்ட போது குதிரைக்கு உண்டான உடல் நடுக்கம் முன்னினும் மேலிட்டது. அதனால் வாயைத் திறக்கவும் கூடவில்லை. ஆயினும், கருணைக்கடலான கடவுள், அறியாமையால் தவறு செய்த அசுவத்தினிடம் இரக்கம் கொண்டு, "ஏ, துரகமே, இம்முறை உன் அறியாமைக்கு உன்னை மன்னித்தோம்! ஆயினும், எமக்குப் புத்தி கூறவந்த உன் தவற்றை நீ என்றும் மறவாதிருக்கும்பொருட்டு ஒட்டகத்தையும் உலகுக்கு அருளினோம்,'' என்றார்.

9. அது கேட்ட குதிரை, குதூகலத்துடன் அவ்விடம் விட்டு அகன்றது. ஆயினும், அஃது இன்றும் ஒட்டகத்தைக் கண்டால் அஞ்சி நடுக்கங் கொள்வதை நாம் காண்கிறோம்.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. குதிரை தன் உடல் அமைப்பில் என்னென்ன மாறுதல்கள் இருந்தால் அழகாய் இருக்கும் என்று எண்ணியது?

ஆ. குதிரையின் வேண்டுகோளுக்கு இணங்கிய இறைவர் என்ன செய்தார்?

இ. குதிரை தன் உடல் அமைப்பில் மாறுதல்களை ஏன் விரும்பவில்லை?

II. இப்பாடத்தில் குதிரை, சந்தோஷம், அழகு என்னும் சொற்பொருளில் வந்துள்ள பிற சொற்கள் எவை?

III. முடித்துக் காட்டு :—

அ. நான்————கண்டேன்.

ஆ. நாயை————அடித்தேன்.

இ. நான்————அண்ணன்.

ஈ. நான்————பெரியவன்.

12. பத்திரிகைச் செய்தி—I

தூத்துக்குடியில் வ. உ. சி. தினம்

ஞாபகார்த்த நிதிக்கு வேண்டுகோள் :

தூத்துக்குடி நவ. 19—

தூத்துக்குடியில் நகரக் காங்கிரஸ் கமிட்டி ஆதரவில் தேச பத்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. 18-ஆந் தேதி முதல் 25-ஆந் தேதி வரை பிள்ளையவர்கள் ஞாபகார்த்த நிதிக்கு இங்கும், நெல்லை ஜில்லாவில் பல இடங்களிலும் நிதி வசூலிப்பதென்றும், இடையிடையே கூட்டங்கள் நடத்துவதென்றும், கடைசித் தினமாகிய 25-ஆந் தேதியன்று ராஜாஜியை அழைத்து கூட்டம் நடத்துவதென்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

காலையில் தொண்டர்கள் வடக்கு ரத வீதி மைதானத்திலிருந்து தேசபத்தர் வ. உ. சி. படத்துடன், தேசியக்கொடி தாங்கி பாரதியாரின் கீதங்களைப் பாடிக்கொண்டு ஊர்வலம் ஆரம்பித்து, இரத வீதிகளைச் சுற்றி வந்த பிறகு, மேற்படி மைதானத்தில் கொடியேற்று விழா நடைபெற்றது.

ஹிந்தி பிரசாரகர் திரு. முத்தையா தாஸ் கொடியேற்றிவைத்துப் பேசினார். தொண்டர்கள் தேசிய கீதங்கள் பாடிக் கொடி வணக்கம் செய்தார்கள்.

பொதுக்கூட்டம் :

இரவு 7 மணிக்கு வடக்கு ரத வீதித் திருஞானசம்பந்தர் மடத்தின் பக்கத்திலுள்ள மைதானத்தில் பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. கமிட்டி பொக்கிஷதார் திரு. ஏ. பி. சி. வீரபாகு பிள்ளை தலைமை வகித்தார். அவர் பேசுகையில் தேச பத்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை தேசத்துக்காக வேலை செய்த காலத்தில் மக்கள் எவ்விதப் பிற்போக்கான நிலையில் இருந்தார்கள் என்றும், அந்தச் சமயத்தில் பெரும்புரட்சியை நடத்திய வீரர் பிள்ளையவர்கள் என்றும், அதனால் ஏற்பட்ட சிறைவாசத்தை ஏற்றுச் சிறையில் பல வகையான கஷ்டங்களை அனுபவித்த தியாகியாகிய வீரருக்குத் தூத்துக்குடியில் ஞாபகார்த்தச் சின்னம் ஏற்படுத்த

வேண்டுவது அவசியமென்றும், ஞாபகார்த்த நிதிக்கு எல்லாரும் தாராளமாகப் பணம் கொடுத்து உதவ வேண்டும் என்றும் கூறினர்.

பின்னர்த் திரு. பன்னிருகைப் பெருமாள் ஆசாரியார், நாமக்கல் கவிஞர் தேசபத்தர்மீது பாடியுள்ள பாடல்களைப் பாடினர்.

பின்னர் நிதிக் கமிட்டிக் காரியதரிசி திரு. எம். வேங்கடகிருஷ்ணன் பேசினர். மேற்படி நிதிக்காகக் கொடுக்கப்பட்ட பவுண்டன் பேனா, காப்பித்தூள் பொட்டணம் இவைகளை ஏலத்தில் விட்டார். இரண்டையும் ஒருவர் ரூ. 17க்கு எடுத்து, அவற்றை மறுபடியும் நிதிக்கே கொடுத்துவிட்டார். மறுபடியும் ஏலம் விடப்பட்டு, இரு சாமான்களையும் ரூ. 14க்கு இருவர் எடுத்தனர். பின்னர் மணிபர்ஸ் ஏலம் விடப்பட்டு, ரூபா 3க்குக் கூட்டத் தலைவரே எடுத்துக்கொண்டார்.

பின்னர், தலைவர் முடிவுரை கூறிய பின், 'வாழிய செந்தமிழ்' என்னும் கீதத்துடன் கூட்டம் முடிவு பெற்றது. கூட்டத்தில் உண்டி வசூல் நடந்தது.

(ந. நி.)

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. தூத்துக்குடியில் வ. உ. சி. தினம் என்று கொண்டாடப்பட்டது ?

ஆ. காலையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவை ?

இ. மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவை ?

ஈ. மாலையில் நடைபெற்ற கூட்டத்தில் நிதி எவ்வாறு வசூலிக்கப்பட்டது ?

13. கண்ணபிரானார் தூது

(நாடகம்)

காட்சி—1

களம்: உபப்பிலாவியம்
காலம்: முற்பகல்
பாத்திரங்கள்: தருமர், வீமர், அருச்சுனர், நகுலர், சகாதேவர், திரௌபதி, கண்ணபிரானார்

தருமர்: [கண்ணபிரானாரை நோக்கி] சோதிரூபரே, கௌரவர்கள் எங்கள் நாட்டை நியாய முறையில் கொடுக்க ஒரு சிறிதும் விரும்பவில்லை. ஆகவே, எம் நாட்டை அடைய முயற்சியின்றி இருப்பது தகுமா?

கண்ணபிரானார்: பெரியீர், குரு நாட்டைப் போர் புரிந்து பெற விரும்புகின்றீர்களா, அல்லது மீண்டும் வனத்தில் வாழ விருப்பமா? உங்கள் ஐவரின் அபிப்பிராயங்களையும் யான் அறிய விரும்புகிறேன்.

தரு: கமலக்கண்ணரே, நீர் எமக்காகத் துரியோதனனிடம் தூது சென்று எங்கள் பாதி அரசைக் கேளும்; அதை அவன் மறுத்தால், ஐந்து ஊர்கள் தரச் சொல்லும்; அதற்கும் அவன் உடன்படாவிட்டால், ஐந்து வீடுகளாவது கேளும்; அதற்கும் அவன் இசையாவிட்டால், அவனை எம்முடன் போர் செய்ய ஆயத்தமாக இருக்கச் சொல்லிவிட்டு வாரும்.

வீமர்: [கடுங்கோபத்துடன் எழுந்து நின்று, பற்களைக் கடித்து, உதடுகள் துடிதுடிக்க] அண்ணா, நம் மனைவியைத் துச்சாதனன் அரச சபையில் அவமானப் படுத்தினான். அப்போதே அக்கொடியவர்களைக் கொன்று

ஒழித்திருப்பேன்! ஆனல், அக்காலத்தில் 'பொறுங்கள்! பொறுங்கள்!' என்று கூறி எங்களை அடக்கினீர். அதனல், என்ன நேர்ந்தது! நமக்கும் நமது குலத்துக்கும் உலகம் உள்ள அளவும் நீங்காத பழிதான் நேர்ந்தது!

கண்: அப்பா, வீமா, கோபம் கொள்ளாதே! அண்ணுவைப் பழிக்காதே! தருமர் என்னைத் தூது அனுப்ப விரும்புவது அரசர்க்குரிய முறை. நான் தூது போவதுபற்றி உன் அபிப்பிராயத்தைக் கூறு.

வீம: துளவத்தாமரே, நீர் தூது போவதைப் பற்றிய என் எண்ணத்தைக் கூறுகிறேன்; கேளும்: உம்முடைய திருப்பாதங்கள் சிவக்கத் துரியோதனனிடம் நீர் தூது செல்ல வேண்டா. என்னையே அவனிடம் தூதாக அனுப்புங்கள். நான் சென்று அக்கௌரவர்களை அரைக் கணத்தில் தொலைத்துவிட்டு, அண்ணுவுக்கு அரசளிக்கின்றேன்! பிறகு உமதிஷ்டம்!

[பீடத்தில் இருக்கின்ருர்.]

கண்: [அருச்சுனரைப் பார்த்து] அருச்சுன, யான் தூது போவது பற்றி உன் எண்ணம் யாதோ?

அருச்சுனர்: கண்ணபிரானுரே, மூவுலகுமளந்த திருப்பாதங்கள் நோவ நீரே அத்துரியோதனனிடம் தூது சென்ருலும் சரி, அண்ணு கூறிய அனைத்தையும் சொன்னுலும் சரி, அக்கொடியவன் கேளான். கெடுமதி உடையவனுக்கு அறநெறி தோன்ருது. உவர் நிலத்தில் நெல்லை விதைத்தால், அது விளையுமா? பாம்புக்குத் தினம் பாலையூட்டினுலும் அது விஷத்தைத்தானே தரும்? [தருமரை நோக்கி] அரசர்க்கரசரே, திரௌபதியைத் துகிலுரிந்த காலத்தில் நாம் வாளாவிருந்த குற்றம் தீர வேண்டாவோ?

கண் : பார்த்தா, உன் எண்ணத்தை அறிந்தேன்! நீ அமர்க! நகுலா, உன் எண்ணம் யாதோ?

நகுலர் : அண்ணு, நமது குலத்தில் தோன்றிய புரூரவன், ஊர்வசியைக் கவர்ந்து சென்ற அசுரரோடு போர் செய்தான்; அவளை மீட்டுத் தேவேந்திரனிடம் ஒப்புவித்தான். அவன் குலத்தில் தோன்றிய நாம், நம் மனைவியைப் பங்காளிகள் மானபங்கம் செய்த போது வாளாவிருந்தோம்! மேலும், அப்பகைவரிடம் சென்று நமக்குரிய நாட்டை இரந்து பெறவும் நிச்சயித்தீர். இதைவிட அவமானம் நமக்கு என்ன வேண்டும்?

கண் : நகுலா, உன் கருத்தை அறிந்தேன். அமர்க! சகாதேவா, உன் கருத்தைக் கூறு; கேட்போம்.

சகாதேவர் : முதல்வரே, நீர் சிந்தித்தபடி தூது சென்ருல் என்ன, செல்லாவிட்டால் என்ன? துரியோதனன் நாடு கொடுத்தால் என்ன, கொடாவிட்டால் என்ன? இந்தத் திரௌபதி கூந்தலை விரித்தால் என்ன, முடித்தால் என்ன? எல்லாம் பரம்பொருளாகிய உமது எண்ணப்படியன்ரே நடக்கும்? உமது எண்ணம் இன்னதென்பதை இங்குள்ளார் அறிய மாட்டார். ஆனல், யான் அறிவேன்! உமது எண்ணம் எதுவோ, அதுவே எனது கருத்தும்.

கண் : [தமக்குள்] இது என்ன! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலாயிற்றே! பலர் முன் கேட்டால், இவன் நமது இரகசியத்தை வெளியாக்கிவிடுவான். இவனைத் தனியிடத்திற்கழைத்துப் போய்ப் பேசுவதுதான் நலம். [சகாதேவரை நோக்கி] சகாதேவா, யான் உன்னிடம் சிறிது நேரம் தனித்துப் பேச விரும்புகிறேன். என் பின்னே வா; வெளியே செல்வோம்.

[இருவரும் வெளியே செல்கின்றனர்.]

[திரை]

காட்சி—2

களம்: தருமர் சபையை அடுத்த மண்டபம்
காலம்: முற்பகல்
பாத்திரங்கள்: கண்ணபிரானர், சகாதேவர்

கண்: [சகாதேவர் தோள்மீது ஒரு கையை வைத்துக்கொண்டு] சகாதேவா, என் எண்ணம் என்ன என்பதை நீ அறிவையோ? அறிந்திருந்தால், கூறு.

சகா: கோபாலரே, இனி நடக்கவிருக்கும் பாரதப்போரில் எங்களையும், எங்கள் பகைவரையும், யாவரையும் நீருக்கிப் பூபாரம் நீக்குவதுதானே உமது எண்ணம்?

கண்: அப்படியானல், பாரதப் போர் நிகழாமல் இருக்க ஏதேனும் உபாயம் கூறுவாயா?

சகா: கோவிந்தரே, பாரதப்போர் நிகழாவண்ணம் தடுக்க வல்லவர் நீரன்றி வேறு யாவர்? ஆயினும், உமது விருப்பப்படியே கூறுகிறேன்; கேளும்: கௌரவர்க்கும், பாண்டவர்க்கும் அரசு தாராமல், கன்னரை அரசராக்க வேண்டும். அவரைக் கொல்வதாகச் சபதம் செய்துள்ள தனஞ்சயர் தலையைக் கொய்ய வேண்டும். துரியோதனன் இறந்த பிறகு முடிக்க இருக்கும் திரௌபதியின் கூந்தலைக் களைய வேண்டும். உம் கரங்களையும் யான் கட்ட வேண்டும். இவை நடைபெற்றால் பாரதப்போர் நிகழாது.

கண்: சகாதேவா, சந்தோஷம்! நீ கூறியவற்றில் முதல் மூன்றையும் நீ இயற்றக் கூடுமானாலும், என்னை நீ கட்ட இயலுமோ?

சகா: புயல் வண்ணரே, உமது அருளின் திறத்தை நீர் அறியீர். உமது திவ்விய ரூபத்தைக் காட்டுவீராயின், அட்டியின்றி உம்மைக் கட்டிவிடுவேன்.

கண் : [தமக்குள்] இவன் திறமையைப் பரிசோதிப்போம்! பதினுயிரம் உருவங்களுடன் இவன் முன் நிற்போம்! எப்படி இவன் கட்டுகிறுன் என்பதைக் காண்போம்! [சகாதேவரை நோக்கி] சகாதேவா, இதோ! நீ விரும்பியபடி என் உருவத்தைக் காட்டினேன்; கட்டு, பார்க்கலாம்!

சகா : [தமக்குள்] இஃது என்ன ஆச்சரியம்! எங்குப் பார்த்தாலும் கண்ணபிரானுர் உருவமாகவே இருக்கிறதே! இவற்றுள் எந்த உருவம் மூல உருவம் என்பதை அறிய முடியவில்லையே! ஆயினும், பரமர் பத்தி வலையில் அகப்படுவார் என்று பெரியார் கூறுகின்றனரே! முயற்சி செய்வோம். [அன்பாகிய கயிற்றுல் உண்மையான உருவத்தைப் பிணித்துவிடுகிறுர்.]

கண் : சகாதேவா, உனது அன்புக்கு யான் கட்டுப்பட்டேன். என்னை விட்டுவிடு.

சகா : உம்மை யான் விடவேண்டுவீரானுல், இனி நிகழ இருக்கும் பாரதப்போரில் எங்கள் ஐவரையும் காப்பதாக வரமருள வேண்டும்.

கண் : அவ்வாறே காக்கின்றேன். என்னை அவிழ்த்து விடு. சகாதேவா, நமக்குள் நடைபெற்ற இச்சம்பாஷணை இரகசியமாகவே இருக்க வேண்டும். ஜாக்கிரதை!

சகா : உமது விருப்பப்படியே நடந்துகொள்கின்றேன், சுவாமி.

கண் : நேரமாயிற்று. வா; நாம் தருமரிடம் செல்வோம்.

[இருவரும் செல்கின்றனர்.]

[திரை]

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. தருமர் கண்ணபிரானாரைத் துரியோதனனிடம் கேட்கும்படி வேண்டினது என்ன ?

ஆ. வீமர் கூறிய அபிப்பிராயம் என்ன ?

இ. அருச்சுனர் சொல்லியவை யாவை?

ஈ. நகுலர் தெரிவித்தது யாது ?

உ. கண்ணபிரானார் சகாதேவரை ஏன் தனியே அழைத்துச் சென்றார் ?

ஊ. பாரதப்போர் வாராமல் தடுக்கச் சகாதேவர் கூறிய யோசனை என்ன ?

எ. சகாதேவர் தம் விருப்பத்தை எங்ஙனம் முடித்துக்கொண்டார் ?

II. இப்பாடத்தில் கண்ணபிரானாரைக் குறிக்க வந்துள்ள சொற்களை எடுத்து எழுது.

III. கீழ் வரும் வாக்கியங்களின் பகுதிகளில் ஏற்றவற்றைச் சேர்த்து எழுது :—

கௌரவர்கள் எங்கள் நாட்டை	பெற விரும்புகிறீர்களா ?
குரு நாட்டைப் போர் புரிந்து	கொன்று ஒழித்திருப்பேன்.
அப்போதே அக்கொடியவர்களைக்	கொடுக்க விரும்பவில்லை.
கெடுமதி உடையவனுக்கு	தேவேந்திரனிடம் ஒப்படைத்தான்.
புரூரவன் ஊர்வசியை மீட்டு	அறநெறி தோன்றாது.

IV. ஒவ்வோர் இடத்துக்கும் வழங்கும் பெயரைக் கோடிட்டுள்ள இடத்தில் எழுது.

அ. அரசன் வசிக்கும் இடம்———

ஆ. மனிதன் வசிக்கும் இடம்———

இ. பூஞ்செடிகள் உள்ள இடம்———

ஈ. புலி வாழும் இடம்———

உ. பசு கட்டப்படும் இடம்———

ஊ. குதிரை கட்டப்படும் இடம்———

எ. ஆடுகள் அடைக்கப்படும் இடம்———

14. குளிர்ப் பாலையில் மனித வாழ்க்கை

1. 'பாலை நிலம்' என்னும் தொடர் வெப்பம் நிறைந்த, மழை குறைந்த மணல் வெளியை மட்டும் குறிப்பது என்று பலர் கருதுகின்றனர். இது தவறு. மழை இல்லாமையாலோ, அதிக வெப்பத்தினாலோ, கடுமையான குளிரினாலோ, தாவரங்கள் தோன்றி விருத்தியடையாத நிலமே பாலை நிலம் எனப்படுவது. இத்தகைய பாலை நிலம் அதிவெப்ப மண்டலத்திலும், மிதவெப்ப மண்டலத்திலும், கடுங்குளிர் மண்டலத்திலும் உண்டு.

2. உலகப் படத்தில் வடதுருவ வட்டத்தைப் பார். அதற்கு வடக்கில் வட அமெரிக்காவின் ஒரு பகுதியும், அதையடுத்துப் பல தீவுகளும் இருத்தலைக் கவனி. கடுங்குளிர் மண்டலத்தில் உள்ள இந்நிலப் பகுதிகள் குளிர்ப்பாலை நிலங்கள். இவற்றிற்குத் துந்திராப் பிரதேசம் என்னும் பெயர் வழங்கி வருகிறது.

3. இப்பகுதிகளின் நில அமைப்புக் கரடு முரடாய் இருக்கும். தட்ப வெப்ப நிலைகளோ, பெரிதும் அதிசயிக்கத்தக்கவை. இங்கு ஆண்டுதோறும் பல மாதங்கள் கடுங்குளிராயிருக்கும். இதற்குக் காரணம், இங்கு இம்மாதங்களில் சூரியன் தெரியாமையே. இம்மாதங்களே இங்குக் குளிர்காலம். இப்பருவத்தில் பூமியின்மீது பனி உறைந்து இருக்கும். நீர் நிலைகளில் உள்ள நீரும் உறைந்துவிடும். எங்குப் பார்த்தாலும் உறைபனிப் படலங்களே காட்சியளிக்கும். தாவரம் என்பதே இராது.

4. கோடைகால ஆரம்பத்தில் பனிக்கட்டிகள் உருக ஆரம்பிக்கும். சிற்சில இடங்களில் கோடையிலுங்கூடத் தரை தெரியாமல் பனிக்கட்டி மூடிக்கொண்டிருக்கும்.

பனிக்கட்டி முற்றிலும் உருகித் தரை தெரிகின்ற இடங்களில் 'லிச்சன்ஸ், மாஸஸ்' என்னும் பாசி வகைகளும், சிறு பூஞ்செடிகளும் முளைத்து வளரும். கோடைகாலம் மிக நீண்டதன்று. ஆயினும், அப்பருவத்தில் சூரியன் மறைவதே இல்லை. இதனாற்றான் இப்பகுதிக்கு 'நடு நிசிச் சூரிய நாடு' என்னும் பெயர் வழங்கி வருகிறது.

5. இக்குளிர்ப் பாலை நிலங்களிலும் சில விலங்குகள் வாழ்கின்றன. அவற்றுள் 'கரிபோ' என்னும் ஒரு வகை மான்களும், மயிரடர்ந்த பெரிய நரிகளும், உரோமம் நிறைந்த வெண்கரடிகளும் முக்கியமானவை. நீர் நிலைகளில் மீன்களும், கடல்களில் ஸீல் என வழங்கும் நீர் நாயும், வால்ரஸ் என்னும் கடற்பசுவும் வசிக்கின்றன.

6. இத்தகைய இடங்களிலும் மனிதர் வசிப்பது விந்தையாகத் தோன்றுகிறதல்லவா? இங்கு வசிக்கும் மக்களுக்கு எஸ்கிமோக்கள் என்பது பெயர். அவர்கள் குட்டையான வடிவம் உடையவர்கள்; பலம் மிக்கவர்கள். எஸ்கிமோக்கள் குளிர்காலத்தில் பனிக்கட்டிப் பாறைகளை அடுக்கித் தாங்கள் வசிப்பதற்கு ஏற்ற சிறு வீடுகளை அமைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் குளிர்காலத்தில் அங்குக் கிடைக்கக்கூடிய மிருகங்களை வேட்டையாடி, அவற்றின் மாமிசத்தைத் தின்று பிழைக்கிறார்கள். நீர் நிலைகளின் மேற்பாகங்கள் உறைந்திருக்குமாதலால், அவற்றை உடைத்து அங்கு உண்டாகும் துவாரங்களின் மூலம் தூண்டில் இட்டு மீன்களைப் பிடிப்பார்கள். மீன் எஸ்கிமோக்களின் முக்கிய உணவுப்பொருள்களுள் ஒன்று.

7. கோடைகாலத்தில் உறைபனி உருக ஆரம்பிக்கும். ஆதலால், அப்போது அவர்களுக்குப் பனிக்கட்டி வீடுகள் பயன் படா. அவை உருக ஆரம்பித்துவிடும். ஆகவே, எஸ்கிமோக்கள் கரிபோக்களின் தோல்களால் கூடாரங்களை

அமைத்துக்கொண்டு, அவற்றில் வசிப்பார்கள். அக்-காலத்தில் அவர்கள் தோல்களால் அமைக்கப்பட்ட சிறு படகுகளில் ஏறிச்சென்று, கடலில் மீன் பிடிப்பார்கள்; ஸீல், வால்ரஸ் முதலிய நீர் வாழ் பிராணிகளையும் வேட்டை-யாடுவார்கள்.

8. கோடை நீங்கிக் குளிர்காலம் ஆரம்பமாகும்போது எஸ்கிமோக்கள் தங்கள் கூடாரங்களைப் பெயர்த்து வண்டி-களில் ஏற்றிக்கொண்டு தெற்கு நோக்கிச் சென்று, ஊசி-யிலைக் காடுகளின் அருகில் வசிக்க ஆரம்பிப்பார்கள். அவர்கள் உபயோகிக்கும் வண்டிகள் விநோதமானவை; சக்கரங்கள் இல்லாதவை; நாய்களால் இழுக்கப்படுபவை; அவற்றின் பெயர் 'ஸ்லெட்ஜ்' என்பது.

9. எஸ்கிமோக்கள் அணியும் உடையைக் கண்டால், நமக்குச் சிரிக்கத்தான் தோன்றும். அவ்வுடைகள் கரிபோ-

வின் தோலால் ஆனவை. அத்தோல்கள் உரோமம் நீக்கப் பெறுதவை. உரோமம் உட்பக்கம் இருக்கும்படி அவ்வுடைகள் தைக்கப்பட்டிருக்கும். அவற்றை உடுப்பவரின் உடல் கதகதப்பாயிருத்தற்காக இம்முறை அனுசரிக்கப்படுகிறது. ஸீல் என்னும் பிராணியின் தோலால் அவர்கள் செருப்புக்கள் தைத்துக்கொள்கிறுர்கள்; அதன் கொழுப்பை விளக்கெரிக்க உபயோகிக்கிறுர்கள்; கரிபோவின் நரம்புகளை முறுக்கிக் கயிறுகளாகப் பயன்படுத்துகிறுர்கள். அவற்றின் வன்மை மிக்க கொம்புகளை ஈட்டிகளின் தலைகளாக அமைத்துக்கொள்கிறுர்கள்.

10. எஸ்கிமோக்கள் செவ்விந்திய இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் வாழ்க்கை இன்னல்கள் நிறைந்தது. ஆயினும், அவர்கள் அவற்றைப் பொருட்படுத்தாமல் மகிழ்ச்சியாகவே வாழ்ந்து வருகிறுர்கள். இக்காலத்தில் எஸ்கிமோக்கள் நாகரிகப்படிகளில் மெல்ல அடி வைத்து முன்னேறி வருகின்றுர்கள்.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. 'பாலை நிலம்' என்பது யாது ?

ஆ. எஸ்கிமோக்கள் எங்கு வசிக்கிறுர்கள் ?

இ. அவர்கள் குளிர்காலத்தில் எப்படி வாழ்கிறுர்கள் ?

ஈ. கோடையில் அவர்கள் செய்யும் தொழில்கள் யாவை ?

உ. எஸ்கிமோ நாட்டுப் பிராணிகளும் தாவரங்களும் எவை?

ஊ. அவற்றை எஸ்கிமோக்கள் எப்படிப் பயன்படுத்திக்கொள்கிறுர்கள் ?

எ. எஸ்கிமோக்களின் நாட்டுக்கு வழங்கும் பெயர் என்ன ? அதற்குக் காரணம் என்ன ?

II. கீழ் வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பதில் பொருள் மாருமல் வேறு சொற்களை அமைத்து எழுது :—

அ. இங்குத் **தட்ப** வெப்ப நிலைகள் மிகவும் **அதிசயிக்கத் தக்கவைகள்.**

ஆ. இங்குச் சில **விலங்குகள் வாழ்கின்றன.**

இ. இவர்கள் வாழ்க்கை **இன்னல்கள் நிறைந்தது.**

III. தடித்த எழுத்தில் உள்ள சொற்களைப் பன்மையாக்கி வாக்கியத்தை எழுது :—

அ. **வெண்கரடி,** உரோமம் அடர்ந்த மிருகம்.

ஆ. **கரிபோ,** மான் இனத்தைச் சேர்ந்தது.

இ. **மனிதன்,** வாழ முடியாது.

ஈ. **நீர்நிலையின்** மேற்பாகம் உறைந்திருக்கும்.

விளையாட்டு—4

சரோஜினி: சகுந்தலா, சாரதா, சந்திரா, கமலா, விமலா, சுலோசனு, எல்லீரும் வாருங்கள். இன்று ஒரு புதிய விளையாட்டு விளையாடலாம்.

சகுந்தலா: என்ன விளையாட்டு?

சரோ: சொல்கிறேன்; கவனியுங்கள். அனைவரும் வட்டமாக அமர வேண்டும். ஒவ்வொருவரும் கையில் கற்பலகையும் எழுதுகோலும் வைத்துக்கொள்ள வேண்டும். வட்டத்தின் மத்தியில் ஒருத்தி நிற்பாள். வட்டத்தில் உள்ள ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு வாக்கியத்தைத் தன் கற்பலகையில் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். மத்தியிலிருப்பவளை வட்டத்தில் உள்ள எவளாவது கூப்பிட்டுத் தன் பலகையைக் காட்டிப் படிக்கச் சொல்ல வேண்டும். பிறகு பக்கத்துப் பெண், பிறகு அவளுக்கு அடுத்தவள், இம்மாதிரி எல்லாரும் கற்பலகையைக் காட்ட வேண்டும். எதையாவது மத்தியில் இருப்பவள் படிக்கத் தவறினல், யாருடைய வாக்கியத்தைப் படிக்க முடியவில்லையோ, அவள் இராணி. அவள் மத்தியில் நிற்க வேண்டும். அவள் இடத்துக்கு நின்றிருந்தவள் போய்விட வேண்டும். இதற்கு 'இராணி ஆட்டம்' என்பது பெயர்.

சாரதா: இது நல்ல ஆட்டந்தான்! வாருங்கள்; ஆடத்தொடங்குவோம்.

15. வழிப்போக்கனும் குரங்கும்

(கதைப் படம்)



குறிப்பு :—படங்களை ஊன்றிப் பார்த்து, அவற்றால் அறியப்படும் செய்திகளைத் திரட்டிக் கதையாக எழுது.

16. காற்றடி யந்திரம்

(பாட்டு)

இத்தலத்தில் நிற்கும்என்னை யார்எனநீர் அறிவீரோ?
சத்தமிட்டுக் காற்றுடனே சமரிடுமோர் அரக்கன்யான்.
இங்குநின்றே கைவிரித்தென் இஷ்டம்போலச் சுழலுவேன்;
தங்குதடை யின்றிக்காற்றைத் திசைமறித்து வெல்லுவேன்.
சண்டைகண் டுளங்களித்துச் சடுதியிலென் தலைவரும்
அண்டையினில் வந்திருந்தே அள்ளிஉணவை ஊட்டுவார்;
மேடைமேலே நின்றுயானும் மெல்லச்சுற்றிப் பார்க்கையில்
கோடைவிளைவு கண்டுமனம் குதுகலித்துச் சுழலுவேன்.
தூரத்தினில் நெல்லடிக்கும் தூயகாட்சி கண்டுயான்
ஆரவாரம் செய்துமேலும் ஆர்ப்பரித்துச் சுழலுவேன்.
ஆதிவாரம் இன்றெனக்கே அமைதியான ஓய்வுநாள்,
ஆதலால்கை கூப்பிஇறைவன் அன்பில்ஈடு பட்டுளேன்.

—T. S. உமாபதி

குறிப்பு:—இஃது ஓர் ஆங்கிலக் கவியைத் தழுவி எழுதப்பட்டது.

17. சிற்பமும் ஓவியமும்

1. நாம் வாழும் நாடு இந்தியா. இது வெகு காலத்துக்கு முன்பே புகழ் மிக்கதாய் இருந்தது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. இந்தியா, நீர் வளமும் நில வளமும் உடையது; மலைகளும், ஆறுகளும், காடுகளும் நிறைந்தது. இந்நாட்டில் அக்காலத்தில் வசித்துவந்த மக்கள் கல்வியும் செல்வமும் நிரம்பியவர்கள். அவர்கள் ஓவியத்திலும் சிற்பத்திலும் வல்லவர்களாயும் இருந்தார்கள். அக்காலத்து மன்னர்களும் கல்வி, ஓவியம், சிற்பம் முதலியன முன்னேற்றம் அடைவதற்கான உதவிகள் புரிந்து வந்தார்கள். அதன் பயனாய்ப் பல நூல்களும், ஓவியங்களும், சிற்பங்களும் தோன்றின. அவை இன்றும் நிலைபெற்று நின்று நம் நாட்டின் பண்டைப் பெருமையை விளக்குகின்றன.

2. 'ஓவியம்' என்பது என்ன? 'சிற்பம்' என்பது என்ன? உன் பள்ளிக்கூடத்தில் நீ கற்கும் பாடங்களுள் சித்திரம் வரைவதும் ஒன்றல்லவா? காகிதத்திலும், பலகைகளிலும், சுவர்களிலும் வரையப்பட்டு வர்ணம் தீட்டப்பெற்ற சித்திரப் படமே ஓவியம் என்பது. ஓவியம் தீட்டுபவன் 'ஓவியன்' எனப்படுவான்.

3. இக்காலத்தில் கோவில்களில் கருங்கல் தூண்களிலும், கோபுரங்களிலும் பலவகையான உருவங்கள் செதுக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். கருங்கற்பாறையின்மீது உருவங்கள் செதுக்குவதும், கருங்கல்லைச் செதுக்கிச் சிலைகள் அமைப்பதும் 'சிற்பம்' எனப்படும். மண்ணாலும், மரத்தாலும், உலோகத்தாலும் உருவங்கள் அமைப்பதும் சிற்பமே.

4. பண்டைக்காலத்தில் நம் நாட்டின் பல பாகங்களிலும் ஒப்பற்ற ஓவியங்களும், சீர்மிக்க சிற்பங்களும் அமைக்-

கப் பெற்றிருந்தன. அவற்றுள் அழிந்தவை போக, எஞ்சி நின்றவை, இக்காலத்திற் சில இடங்களில் இருக்கின்றன. அவற்றுள் எல்லோரா, அஜந்தா என்னும் குகைகள் சிறந்தவை.

5. எல்லோரா என்னும் இடத்தைச் சென்னையிலிருந்து, விஜயவாடா, ஹைதராபாது என்னும் பட்டணங்களின் மூலமாக அவுரங்காபாதுக்குப் புகைவண்டியில் பிரயாணம் செய்து சேரலாம். அஃது அவுரங்காபாது என்னும் பட்டணத்துக்குப் பதினைன்கு மைல் தூரத்தில் உள்ளது. அது



சிறந்த சிற்பங்களுக்கு இருப்பிடமாய் இருக்கிறது. அங்கு ஒரு கோவிலும், மலைப்பாறைகளில் குடைந்த சில குகைகளும் உள்ளன. கோவிலுக்குக் 'கைலாச நாதர் கோவில்' என்பது பெயர். இது மிகப் பெரியது; சிறந்த அமைப்புள்ளது; அழகிய சிற்பங்கள் நிறைந்தது; வேலைப்பாடு மிக்க தூண்களைப் பெற்றது. இந்தக் கோவில் முழுவதும் ஒரு பெரிய மலைப் பாறையைக் குடைந்து அமைக்கப்பெற்றிருக்கிறது. இதை அமைத்து முடிக்க ஒரு நூற்றாண்டு ஆகியிருக்கும்

என்கின்றனர் அறிஞர். இது சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் குடையப்பெற்றிருத்தல் வேண்டும்.

6. இக்கோவிலைத் தவிர, மலைச்சரிவில் பாறைகளில் குடையப்பட்டுள்ள குகைகள் இருக்கின்றன. இவற்றில் பௌத்தம், சமணம் ஆகிய இரு மதங்களைப் பற்றிய பல சிற்பங்கள் இருக்கின்றன. இந்துமத சம்பந்தமான சிற்பங்களும் உண்டு. ஒரு குகைக்கோவில் மூன்று மாடிகள் உடையதாய் அமைக்கப்பெற்றுள்ளது. இதிலிருந்து அக்காலத்துச் சிற்பிகளின் வேலைப்பாட்டை நாம் ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

7. அஜந்தாக் குகைகள் எல்லோராவுக்கு வடகிழக்குத் திசையில் ஏறக்குறைய இருபத்தைந்து மைல் தூரத்தில் உள்ள குறுகிய மலைப் பள்ளத்தாக்கில் உள்ளன. இவை மலையில் குடையப்பட்ட முப்பத்திரண்டு குகைகள் அடங்கியவை. இவை ஓவியங்களுக்கு இருப்பிடமாய்த் திகழ்கின்றன. இவை யாவும் புத்தமத சம்பந்தமானவை. இவற்றுள் இருபத்தொன்பது குகைகள் துறவிகள் வாழ்வதற்கான மடங்கள்; மற்றவை, இறைவரை வழிபடும் கோவில்கள். இவைகளில் தீட்டப்பெற்றுள்ள ஓவியங்கள், உலகில் காணப்படும் பண்டைய ஓவியங்கள் எல்லாவற்றினும் சிறந்தவை. அந்த ஓவியங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தீட்டப்பெற்றவை. அவை புத்தமத வரலாற்றை விளக்குகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கூட்டித்தீட்டிய வண்ணங்கள் இன்றுதான் தீட்டியவை போலக் கண்களைக் கவர்கின்றன.

8. அந்த ஓவியங்களிலிருந்து அந்தக் காலத்தின் அரச சபையின் அமைப்பையும், வாழ்க்கையையும் நாம் அறியலாம். அக்காலத்து உடைகளைப் பற்றிய விவரங்களையும் அவ்வோவியங்களால் நாம் திட்டமாக அறியக்கூடும்.

அன்றியும், அக்காலத்துத் தினசரி வாழ்க்கை முறைகளைக் காட்டும் ஓவியங்களும் அங்குக் காணப்படுகின்றன.

9. இத்தகைய ஒப்பற்ற ஓவியங்களும் சிற்பங்களும் நமது நாட்டின் பண்டைய பெருமையை வெளிப்படுத்துகின்றன. ஆனால், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே நமது நாட்டில் சிறப்புற்று விளங்கிய ஓவியத் தொழிலும் சிற்பத் தொழிலும் இக்காலத்தில் கைவிடப் பெற்றன. இதற்குக் காரணம், நம் நாட்டவர் ஓவியத்திலும் சிற்பத்திலும் பற்றில்லாமல் அவற்றை அசட்டை செய்ததேயாகும். இனியேனும் நாம் அவற்றின் பெருமையை அறிந்து, அவற்றைப் பயிலவும் போற்றவும் வேண்டும்.

பயிற்சி:

I. விடை எழுது :—

அ. 'ஓவியம்' என்பது என்ன ?

ஆ. 'சிற்பம்' என்பது என்ன ?

இ. எல்லோரா எங்கிருக்கின்றது? அங்குக் காணப்படும் சிறந்த காட்சிகள் எவை?

ஈ. அஜந்தா எங்குள்ளது? அஃது எதற்குப் பெயர் பெற்றது?

உ. அஜந்தா ஓவியங்களின் சிறப்புக்கள் யாவை?

ஊ. பண்டைய சிற்பங்களாலும் ஓவியங்களாலும் நாம் தெரிந்துகொள்பவை யாவை?

II. கீழ் வரும் சிறு வாக்கியங்களைச் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுது :—

1. நாம் வாழும் நாடு இந்தியா. அது நீர் வளமும் நில வளமும் உடையது. அது வெகு காலத்துக்கு முன்பே புகழ் மிக்கதாய் இருந்தது.

2. இந்தியா, மலைகளும், ஆறுகளும், காடுகளும் நிறைந்தது. அதில் அக்காலத்தில் வசித்து வந்த மக்கள் கல்வியும் செல்வமும் நிறைந்தவர்கள். அவர்கள் ஓவியத்திலும் சிற்பத்திலும் வல்லவர்கள்.

III. தடித்த எழுத்துச் சொற்களைப் பன்மையாக மாற்றி வாக்கியங்களை எழுது:—

அ. அங்கு ஒரு **கோவிலும்** ஒரு **குகையும்** உண்டு.

ஆ. **மற்றது** இறைவரை வழிபடும் **கோவில்**.

IV. கோடிட்ட இடங்களைத் தகுந்த தொடர்களை எழுதிப் பூர்த்தி செய் :—

கலகல, மளமள, குப்குப், பளீர்பளீர்

அ. மரம்———என முரிந்தது.

ஆ. கமலம்———எனச் சிரித்தாள்.

இ. மாட்டைப்———என அடித்தான்.

ஈ. புகை வண்டி———என்று ஓடிற்று.

18. குர்-ஆன்

1. உலகில் வழங்கும் மதங்கள் பல; அவற்றுள் பெரும்பாலாரால் தழுவப்பட்டுள்ள மதங்கள் சில; அவற்றுள் 'இஸ்லாம்' ஒன்று. இஸ்லாத்தைப் பின் பற்றும் மாந்தர் இஸ்லாமியர். இவர்களை முஸ்லிம்கள் என வழங்குகிறோம். இஸ்லாமியருடைய வேத நூலுக்குக் 'குர்-ஆன்' என்பது பெயர். இதன் வரலாற்றை இப்பாடத்திற் படிக்கலாம் :

2. இஸ்லாத்தைப் போதித்த முகம்மது அவர்கள் நபிப் பட்டம் பெற்ற காலத்தில் அரேபியாவில் எழுதும் வழக்கம் அதிகமில்லை. ஆதலால், எழுதத் தெரிந்தவர் மிகச் சிலரே இருந்தனர். ஆயினும், அவர்கள் கேள்வி ஞானம் மிக்கவர்களாயிருந்தார்கள். நபி நாயகம், அரபுகள் மனனம் செய்யும் வழக்கத்தையும் எழுதும் வழக்கத்தையும் விருத்தி செய்தார். அன்றியும், அவர் வேத வசனங்களை அப்போதைக்கப்போது எழுதி வைக்க, 'காத்திபுல்வஹி' என்ற எழுத்தாளர்களை நியமித்திருந்தார்.

3. குர்-ஆனைப் பலர் மனப்பாடம் செய்திருந்தனர். வேறு பலர் நபி நாயகத்தினிடமிருந்து குர்-ஆனைக் கற்றுக்கொள்வதற்காகத் தம் வீடுவாசல்களையும், தொழில்களையும் துறந்து, மஸ்ஜிதுநபவியில் எப்போதும் தங்கியிருந்து, குர்-ஆனைக் கற்று வந்தனர். நபி நாயகத்தால் இஸ்லாத்தைப் பிரசாரம் செய்ய அனுப்பப்பட்டவர்கள் அவர்களே. அவர்கள் தொகை எழுநூறு அல்லது எண்ணூறு என்று கூறப்படுகிறது.

4. இங்ஙிலையில் நபி நாயகம் இவ்வுலகைவிட்டு மறைந்தார். அவருக்குப்பின் 'அபூபக்கர்' என்பவர் கலீபாவாய்

இருந்தார். அவர் காலத்தில் 'யமாமா' என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் குர்-ஆனை மனப்பாடம் செய்து வைத்திருந்தவருள் பலர் மாண்டனர். இதை அறிந்த ஹஜ்ரத் உமர் என்பவர், 'குர்-ஆன் வல்லவர்கள் இவ்வாறு மரணமடைந்துகொண்டே வருவார்களாயின், குர்-ஆனே மறைந்துவிடக்கூடும்,' என்றெண்ணினர். ஆகவே, அவர் ஹஜ்ரத் அபூபக்கர் சித்தீக்கு அவர்களிடம், 'திருக்குர்-ஆனை ஒன்று திரட்டிப் புத்தக வடிவமாக்காவிட்டால், அது மறைந்துவிடக் கூடும். ஆதலால், குர்-ஆன் வாக்கியங்களைத் திரட்டும் முயற்சியை உடனே மேற்கொள்ளவேண்டும்,' என்று யோசனை கூறினர்.

5. அபூபக்கர் அதற்கு இணங்கினர். நபி நாயகத்தின் காலத்தில் கொம்புகள் மீதும், பலகைகள் மீதும், ஓலைகள் மீதும் எழுதப்பட்டிருந்த குர்-ஆன் பாக்கள், ஒன்று திரட்டப்பட்டுக் காகிதத்தில் எழுதி ஒரே புத்தகமாக்கப்பட்டன. அப்புத்தகம் அபூபக்கர் காலத்திலிருந்து கலீபாக்கள் வசமே இருந்து வந்தது.

6. பின்னர் ஹஜ்ரத் உதுமான் என்பவர் கலீபாவாய் இருந்த காலத்தில் இஸ்லாம், ரோம், இரான் முதலிய இடங்களுக்குப் பரவியது. அந்நாடுகளில் வாழ்ந்துவந்த முஸ்லிம்கள் குர்-ஆனைத் திருத்தமாக ஓத வேண்டும் என்று உதுமான் விரும்பினர். ஆதலால், அவர் தம்மிடம் இருந்த குர்-ஆன் பிரதியிலிருந்து வேறு பல பிரதிகளைச் செய்வித்தார். அவை அந்நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. அவற்றுள் சில, இக்காலத்தும் இருந்து வருகின்றன. அவற்றுள் ஒன்று அரேபியாவில் உள்ள மதினாவிலும், ஒன்று ரஷ்யாவின் தலைநகரமான மாஸ்கோவிலும் இருக்கின்றனவாம்.

குறிப்பு:—இது 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' என்னும் பத்திரிகையில் உள்ள ஒரு கட்டுரையைத் தழுவி எழுதப்பெற்றது.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. நபிநாயகம் வேத வசனங்களை எழுதி வைக்க என்ன ஏற்பாடு செய்திருந்தார்?

ஆ. இஸ்லாத்தைப் பிரசாரம் செய்ய நபிநாயகத்தால் அனுப்பப்பட்டவர் யாவர்?

இ. குர்-ஆனைத் திரட்டி எழுதும் முயற்சியை முதன்முதல் மேற்கொண்டவர் யார்?

ஈ. ரோம், இரான் முதலிய நாடுகளில் இஸ்லாம் யார் காலத்தில் பரவியது?

உ. முதலில் எழுதப்பட்ட குர்-ஆன் பிரதியிலிருந்து வேறு பிரதிகள் யாரால், ஏன் செய்விக்கப்பட்டன?

ஊ. பழைய குர்-ஆன் பிரதிகள் இக்காலத்தில் எந்நாடுகளில் உள்ளன?

II. கீழ் வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களை ஒருமை-யாக்கி எழுது :—

அ. இஸ்லாத்தைப் பின் பற்றும் **மனிதர்** இஸ்லாமியர்.

ஆ. **அவர்கள்** கேள்விஞானம் உடையவர்களாய் இருந்தார்கள்.

இ. இஸ்லாத்தைப். பிரசாரம் செய்ய அனுப்பப்பட்டவர்கள் **அவர்களே.**

III. கீழ் வரும் சொற்களுக்குப் பொருள் விளக்கி ஒவ்வொன்றையும் வாக்கி-யத்தில் அமைத்து எழுது :—

அரி—அறி ; கரி—கறி ; புரம்—புறம் ; தரி—தறி ; கூரை—கூறை ; கரை—கறை.

விளையாட்டு—5

கந்தன் :—கண்ணு, மணி, நடராஜா, சங்கரா, சாம்பா, எல்லீரும் வாருங்கள்; இன்று ஒரு புதிய விளையாட்டு விளையாடலாம்.

கண் :—அஃது என்ன விளையாட்டு ?

கந் :—அதுவா? இராசா விளையாட்டு.

மணி :—அதை எப்படி ஆடுவது ? சொல்; கேட்போம்.

கந் :—நாம் எல்லாரும் வட்டமாக அமர வேண்டும்; நம்முள் ஒருவன் ஏதேனும் ஒரு சொல்லை நினைத்துக்கொண்டு அதன் முதல் எழுத்தைச் சொல்ல வேண்டும். பக்கத்தில் உள்ளவன் மற்றோர் எழுத்துச் சொல்லவேண்டும். இப்படியே சொல்லி, வார்த்தையை முடிக்கவேண்டும். 'இதில் என்ன சாமர்த்தியம்?' என்றால், ஒவ்வொருவனும் தன் பக்கத்துப் பையன் வார்த்தையை முடிக்காதபடி எழுத்தை ஆராய்ந்து சொல்ல வேண்டும். ஏன் எனில், வார்த்தையின் இறுதி எழுத்தைச் சொல்லி வார்த்தையை முடிக்கிறவனே இராசா. உதாரணமாக, ஒருவன் ப என்று ஆரம்பிக்கிறான். அடுத்தவன் ழ என்பானானால், அவனுக்கு அடுத்தவன் ம் என்று சொல்லி இராசாவாகிவிடுவான். ஆதலால், ஒவ்வொருவனும் தான் சொல்லும் எழுத்தை அடுத்து, மற்றவன் ஓர் எழுத்தைச் சொல்லி, வார்த்தையை முடிக்காதபடி சாக்கிரதையாய் இருக்க வேண்டும். இந்த ஆட்டத்தில் சொற்கள் இரண்டெழுத்துக்கு மேற்பட்டிருக்கவேண்டும்.

19. கப்பல் ஓட்டிய தமிழர்

1. தன் தாய் நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்கின்றவர் 'தேசத்தொண்டர்' அல்லது 'தேச பத்தர்' எனப்படுவர். நமது பாரத நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பலர் அரும்பாடு பட்டு உழைத்து வந்தனர்; இக்காலத்தும் பலர் உழைத்து வருகின்றனர்.

2. சிறிது காலத்துக்கு முன் நம் தமிழ் நாட்டில் ஒரு சிறந்த தேசத்தொண்டர் இருந்தார். அவர் பெயர் 'சிதம்பரம் பிள்ளை' என்பது. அவர் திருநெல்வேலி ஜில்லாவில், தூத்துக்குடியை அடுத்த ஒட்டபிடாரம் என்னும் ஊரில் பிறந்தார். அவர் தந்தையார் பெயர், 'உலகநாதப் பிள்ளை' என்பது. சிதம்பரம் பிள்ளை முதலில் ஒரு திண்ணைப்பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டார். பிறகு அவர் ஓர் உயர்தரப் பாடசாலைக்கு அனுப்பப்பட்டு, அங்கு மெற்றிக்குலேஷன் வகுப்பு வரையில் படித்துப் பிறகு பரீட்சையிலும் தேர்ச்சி அடைந்தார். அதன் பிறகு, 'பிளீடர்ஷிப்பு' என்னும் வழக்கறிஞர் பரீட்சையிலும் தேறி, ஒட்டபிடாரத்திலேயே நீதிவாதத்தொழிலை நடத்த ஆரம்பித்தார்; சில நாட்களுக்குப்

பிறகு தூத்துக்குடியை அடைந்து, அங்குத் தம் தொழிலைத் திறமையுடன் நடத்தி வந்தார்.

3. தூத்துக்குடியிற் குடியேறிய பிறகு நாட்டின் நன்மைக்கான பல வேலைகளை ஏற்றுக்கொண்டார்; 'விவேகபானு' என்னும் தமிழ் மாதப்பத்திரிகையைத் தொடங்கினர்; அதன் மூலம் ஆசார சீர்திருத்தம், மது விலக்கு முதலிய சமூக முன்னேற்ற வேலைகளைச் செய்து வரலானர்.

4. அக்காலத்தில் வடநாட்டில் வங்காளத்தில் ஒரு தேசீயக் கிளர்ச்சி தோன்றியது. அதன் காரணமாக இந்தியர் அயல் நாட்டுப் பொருள்களை நீக்க வேண்டும் என்று சில தேசத்தொண்டர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்-தார்கள். அப்போது நம் பிள்ளையவர்கள் அதில் தீவிரமாய்க் கலந்துகொண்டார்; தம் ஆடைகளையெல்லாம் எரிக்கு அளித்தார்.

5. அதே சமயத்தில் மற்ருெரு நிகழ்ச்சியும் பிள்ளை-யவர்களின் மனத்தைக் கவர்ந்தது: அக்காலத்தில் தூத்துக்-குடிக்கும் சிங்களத்தீவிற்கும் இடையே வாணிகப் பொருள்-களை 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'யின் கப்-பல்கள், ஏற்றுமதி இறக்குமதி செய்து வந்தன. அந்தக் கம்பெனி ஆங்கிலேயருக்கு உரியது. சுதேசி இயக்கத்தை அந்த ஆங்கிலேயர் வெறுத்தனர்; ஆதலால், சுதேசி-களின் சரக்குகளைத் தம் கப்பல்களில் ஏற்றிச் செல்லாமல், இடையூறு செய்ய ஆரம்பித்தனர். அது கண்ட பல இந்திய வணிகப் பிரபுக்கள் கூட்டம்கூடி, தாங்களே கப்பல் ஓட்ட முடிவு செய்தார்கள். அதற்கு அவர்கள் சிதம்பரம் பிள்ளை-யவர்களின் உதவியை நாடினர்கள். பிள்ளையவர்களும் மகிழ்ச்சியுடன் அம்முயற்சியை மேற்கொண்டார்; அதற்-காகப் பாரதநாடு முழுவதும் சுற்றியலைந்து பங்காளிகளைத் திரட்டினர். தமிழ் நாட்டு மூவேந்தர் காலத்தில் தமிழ்

நாட்டு மரக்கலங்கள் பிற நாடுகளுக்குச் சென்று வாணிகம் நடத்தியதை நீ அறிவாய்: ஒப்பற்ற தமிழரான பிள்ளையவர்கள் மீண்டும் தமிழ் நாட்டில் கப்பல் ஓட்டும் தொழிலை ஆரம்பித்து, அதை வெற்றிகரமாகவும் நடத்தி வைத்தார்.

6. சிதம்பரம் பிள்ளையவர்கள் தம் நாட்டுப் பற்றுக் காரணமாகச் சிறை சென்றார். ஆறாண்டுகளைச் சிறைச்சாலையில் அவர் கழிக்க நேர்ந்தது. அங்கு அவர் சாதாரணக் குற்றவாளிகளைப் போலச் செக்கிழுத்தல், கல் உடைத்தல் முதலிய கஷ்டமான வேலைகளைச் செய்ய நேர்ந்தது. அவரது நாட்டுப்பற்று, அவற்றைப் பொருட்படுத்தவில்லை. சிறைச்சாலையிலும் அவர் வீணே காலம் கழிக்கவில்லை. தமிழ் மொழியில் வல்லவரான அவர், சிறையிலேயே பல அரிய நூல்களை இயற்றினர்.

7. பிள்ளையவர்கள் சிறையிலிருந்து விடுதலையடைந்த பிறகு வறுமையால் வாட்டமுற நேர்ந்தது. ஒரு சிலரே அவர் பெருமையை அறிந்து, அவருக்கு ஆதரவளித்து வந்தனர். அவர் தம் 83-ஆம் வயதில் இறைவனடி எய்தினர்.

8. பிள்ளையவர்கள் தம் நலத்தைக் கருதியிருந்தால், ஒரு கோடீஸ்வரராய் வாழ்ந்திருக்கலாம். அதை அவர் வெறுத்தார். அவர் தாய் நாட்டுக்காகவும், தாய் நாட்டு மக்களுக்காகவும் தம் நலங்களை அர்ப்பணம் செய்த ஒப்பற்ற தியாகியாராவர்.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. 'தேசத்தொண்டர்' என்பவர் யார் ?

ஆ. சிதம்பரம் பிள்ளையவர்களின் பிறப்பிடம் எது ?

இ. சிதம்பரம் பிள்ளையவர்கள் மேற்கொண்ட தொழில்கள் யாவை ? அவற்றுள் அவர் புகழுக்குக் காரணமாயிருந்தது எது ?

ஈ. பிள்ளையவர்கள் சிறைச்சாலையில் செய்த ஆக்க வேலைகள் யாவை ?

உ. பிள்ளையவர்களின் சிறப்பியல்புகள் யாவை ?

II. கீழே தரப்பட்டுள்ள ஆண்பாற்சொற்களுக்குப் பெண்பாற்சொற்கள் எழுது :—

தேவன், சீமான், குமரன், தனயன், உபாத்தியாயன், அவன், ஒருவன், திருவாளர், வேடன், ஆசிரியன்

III. கீழ் வரும் வாக்கியங்களைக் கேள்வி வாக்கியங்களாக்கு :—

அ. பறவை பறந்தது.

ஆ. நீ சாப்பிட்டாய்.

இ. அவன் குற்றம் செய்தான்.

ஈ. கமலம் நன்குகப் பாடுவாள்.

உ. இராமனும் சீதையும் நாட்டுக்குத் திரும்பினுர்கள்.

ஊ. பாண்டவர் கௌரவரை வென்றனர்.

20. ஒரு நிலக்கரித் துண்டு கூறிய வரலாறு

1. நான் யார், தெரிகிறதா? என் கரிய நிறத்தைக் கண்டவுடனே சொல்லிவிடலாமே! ஆம். நீ நினைப்பது சரி-தான். நான் கருங்கல் துண்டன்று; நிலக்கரித்துண்டு. என் வரலாற்றைக் கேட்க நீ விரும்புகிறாய் அல்லவா? சொல்கிறேன்; கவனித்துக் கேள்:

2. மனிதர் தோன்றுவதற்கு முன் உலகின் பல பகுதிகளில் பெருங்காடுகள் இருந்தன. அவை பெருங்-காற்றாலும், பூகம்பங்களாலும் அழிந்தன. அவ்வாறு அழிந்த காடுகள் மண்ணுள் மறைந்து, புதையுண்டு போயின. அவ்விடங்களில் மீண்டும் புதிய காடுகள் தோன்றின. அவைகளும் அழிந்து புதைந்தன. இவ்வாறு மேலுமேலும் புதையுண்ட காடுகள், பல மட்டங்களில் அடுக்கடுக்காய்ப் பூமியுள் ஆங்காங்கு உள்ளன. அவை மேலுள்ள மண்ணின் பளுவினால் அழுந்திப் பாறைகளா-யின; அன்றியும், பூமியினுள் இருக்கும் வெப்பத்தால் புழுங்கி, நிறம் மாறிக் கருமை நிறமும் பெற்றன.

3. நானும் அவ்வித நிலக்கரிப் பாறை ஒன்றின் ஒரு புறத்தில் ஒட்டிக்கொண்டிருந்தேன். நான் இந்தியாவின் வடபாகத்தில் உள்ள 'இராணிகஞ்சு' என்னும் இடத்தில் இருந்தேன்.

4. ஒரு நாள் நான் இருந்த இடத்துக்கு மேலே 'கிர்' என்னும் சத்தம் கேட்டது. பிறகு அச்சத்தம் எங்களை நோக்கி வருவது போல இருந்தது. அவ்வொலியை உண்-டாக்கிக்கொண்டு வந்தது ஓர் இரும்புச் சுழலாணி என

நானும் என் கூட்டாளிகளும் அறிந்தோம். அந்த ஆணி இறங்கிய அதிர்ச்சியால் எங்களுள் சிலர் உடைந்து சிதறி-னர். எங்களுள் மிகச் சிறியவராய் இருந்த சிலர் பயத்தால் அவ்வாணியைப் பற்றிக்கொண்டனர். சிறிது நேரத்தில் அஃது மேலே சென்றுவிட்டது.



5. சில மாதங்களுக்குப் பிறகு, நாங்கள் இருந்த இடத்திற்கு நேர் மேலே சில கிணறுகள் தோண்டப்பட்டன. இவற்றை நீங்கள் கனிகள் என்று கூறுகிறீர்கள். இக்-கிணறுகளின் மூலம் பல மாந்தர் வந்து எங்களை இடித்தும், உடைத்தும் பெயர்க்கலாயினர்; பின்னர் எங்களை மேலே கொண்டு வந்து சேர்த்தனர். மேலே வந்த பிறகுதான் மக்கள் எங்கள்மீது கொண்டுள்ள பேராவலும், எங்களைப் பெறுவதற்காக அவர்கள் பட்ட துன்பமும் எனக்கு விளங்-கின. அவர்கள் எங்களைப் பெறுவதற்குப் படுந்துன்பங்-களைப்பற்றி நீ அறிய விரும்புகிறாய் அல்லவா?

6. முதலில் மனிதர் எங்கள் இருப்பிடத்தைத் தேடிக் கண்டுபிடிப்பதில் அடையும் கஷ்டம் கொஞ்சமன்று. பிறகு எங்கள் இருப்பிடத்தை அடையக் கனிகள் தோண்டுவதில் ஏற்படும் துன்பங்களோ, சொல்ல முடியாதவை. சில இடங்களில் பூமியினுள்ளே ஆயிரம் அடி ஆழத்துக்கு மேலும் தோண்ட வேண்டியிருக்கும். அவற்றைத் தோண்டுவதில் ஏற்படும் இன்னல்கள் எண்ணற்றவை. கிணறு தோண்டும் போது பக்கங்கள் இடிந்து சரிந்து, கிணற்றைத் தூர்த்து விடும். அவ்வாறு இடியாமலிருக்கக் கிணற்றுறைகள் உபயோகிக்கப்படும். அவை இரும்பினால் செய்யப்பட்டிருக்கும். கிணற்றிலிருந்து தோண்டப்படும் மண், பாறை முதலியவைகளையும், சுரக்கும் தண்ணீரையும் அப்புறப்படுத்த மேலே பல இயந்திரங்கள் வேலை செய்யும். அன்றியும், மனிதர் கீழே இறங்கவும், மேலே ஏறவும் வசதியளிப்பதும் இயந்திரமே.

7. இவ்விதக் கனிகள் நாங்கள் படிந்து கிடக்கும் மட்டம் வரையில் தோண்டப்படும். பிறகு எங்களை அப்புறப்படுத்துவதற்காக நீண்டு அகன்ற சுரங்கங்கள் வெட்டப்படும். அவை இடியாமலிருக்கப் பலகைகளைப் பரப்பி வன்மையான மர உத்தரங்களை முட்டுக் கொடுப்பார்கள்.

8. சுரங்கத்தில் வேலை செய்யும் ஆட்கள் தங்களுக்கு வேண்டிய ஆயுதங்களையும் உணவுப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு தொட்டிகளில் அமர்ந்து, சுரங்கத்தை அடைவார்கள். சுரங்கத்தினுள் சூழ்ந்திருக்கும் இருளைப் போக்கச் சாதாரண விளக்குகளை உபயோகிக்க முடியாது. ஏன் எனில், அங்குள்ள ஒரு வகை விஷவாயு, தீச்சுடர் பட்டால் எரியுந்தன்மையுடையது. ஆதலால், விளக்கினுள் இருக்கும் சுடரும், அதற்கு வெளியிலுள்ள விஷவாயுவும் சம்பந்தப்படாதபடி அமைக்கப்பட்ட விளக்குகளே சுரங்-

கத்தினுள் உபயோகிக்கத் தக்கவை. ஆனல், இக்காலத்தில் மின்சார விளக்குகள் உபயோகிக்கப்படுகின்றன.

9. சுரங்கத்தினுள் இருக்கும் எங்களைச் சிதைத்துத் துண்டுகளாக்கிய பின்பு, எங்களைக் குதிரை வண்டிகளில் ஏற்றிக் கனிகளின் வாயில்களுக்குக் கொண்டுவருவார்கள். பிறகு அங்குள்ள இருப்புக் கூடைகளில் ஏற்றப்பட்டு, நாங்கள் வெளியுலகத்தை அடைவோம். இக்காலத்தில் சுரங்கங்களின் உள்ளே குதிரைகள் உபயோகிக்கப்படுவதில்லை; வண்டிகள் மின்சாரத்தால் இயக்கப்படுகின்றன.

10. நாங்கள் வெளியுலகத்தை அடைந்தவுடனே அங்குள்ள ஆட்கள் எங்கள் நிறத்திற்கும், நாங்கள் அளிக்க வல்ல உஷ்ணத்திற்கும், சுவாலைக்கும், புகைக்கும் ஏற்றவாறு எங்களைப் பிரிக்கிருர்கள். எங்களுள் மிக்க கரிய நிறமும், பளபளப்பும், இறுகிய தன்மையும் உடையவர்களே சிறந்தவர்களாக மதிக்கப்படுகிருர்கள்.

பயிற்சி:

I. விடை எழுது :—

அ. நிலக்கரி எவ்வாறு உண்டாகிறது ?

ஆ. நிலக்கரிச் சுரங்கங்கள் தோண்டுவதில் ஏற்படும் கஷ்டங்கள் யாவை ?

இ. சுரங்கத்தினுள் உபயோகிக்கப்படும் விளக்குகள் எத்தகையவை ?

ஈ. நிலக்கரி பல வகைகளாகப் பிரிக்கப்படுவது ஏன் ?

II. கீழ் வரும் சொற்களைச் சேர்த்தெழுது :—

உதாரணம் : பணி + ஆள் = பணியாள்

தீ + அணை =

மலை + உயரம் =

மணி + அடி =

ஈ + ஒட்டு =

சுனை + ஆழம் =

III. கீழ் வரும் வினைச்சொற்களிலிருந்து உதாரணத்திற் காட்டியுள்ளபடி தொழிற்பெயர்கள் எழுது :—

உதாரணம் :—விரும்பு—விரும்புதல்

வினை	பெயர்
தோன்று நினை கேள் ஓடு ஆடு பாடு வீழ் உபயோகி	

21. சாந்து பீபி

1. பண்டைக் காலத்தில் நம் பாரத நாட்டில் பல வீர மங்கையர் இருந்தனர் என்று சரித்திரம் கூறுகின்றது. அவர்களுள் 'சாந்து பீபி' என்பவர் ஒருவர். வட இந்தியாவில் அக்பர் மகா சக்கரவர்த்தியார் ஆட்சி புரிந்த காலத்தில், தட்சி-ணத்தில் பீஜப்பூரை ஆட்சி புரிந்த அரசியார், சாந்து பீபி.

2. சாந்து பீபி, கி. பி. 1548-ஆம் ஆண்டில் பிறந்-தார். அவர் ஆமது நகரத்தை ஆண்டு வந்த ஹுஸெய்ன் நைஜாம் ஷாவின் புதல்வியார். அவர் தம் இளமையிலேயே அன்னையாரை இழந்தார். ஆதலால், அவர் தந்தையார் அவரை எப்போதும் தம்முடனேயே வைத்து, வளர்த்து வந்தார். அவர் வேட்டைக்கும், போருக்கும் போகும் போதுகூட, சாந்து பீபியை உடன் அழைத்துச் செல்வது வழக்கம். இதனல், சாந்து பீபிக்கு வேட்டையாடுவதிலும், போர் புரிவதிலும், அரசாங்க காரியங்களிலும் சிறந்த பயிற்சி ஏற்பட்டது.

3. சாந்து பீபி உயரமான கம்பீரத் தோற்றம் படைத்தவர்; உடல் வலிமை நிறைந்தவர்; அழகில் ஈடற்றவர். அவரிடம் பொறுமை, தயை, தன்னடக்கம், தீரம், வீரம் முதலிய அருங்குணங்கள் குடிகொண்டிருந்தன. அவர் கடவுள் பத்திக்கும், நாட்டுப் பற்றுக்கும் இருப்பிடமானவர்.

4. சாந்து பீபியின் அழகைப்பற்றியும், நற்குண நற்செயல்களைப்பற்றியும் கேள்வியுற்ற மன்னர் பலர், அவரை மணக்க விரும்பினர். ஆனால், பீஜப்பூர்ச்சுல்தானான அலி அதில் ஷாவுக்குத்தான் அந்தப் பாக்கியம் கிடைத்தது. அதில்ஷாவை மணந்த சாந்து பீபி, அவரிடம் அன்பும் பணிவும் மிக்கவராய் வாழ்ந்து வந்தார். சுல்தானும் அவரைத் தம் உயிரைவிட மேலாக நேசித்து வந்தார்.

5. சில ஆண்டுகள் கழிந்தன. சாந்து பீபியும் அவர் கணவரும் எல்லா நலன்களையும் பெற்றிருந்தும், அவர்களுக்குப் புத்திரப்பேறு இல்லாமற் போயிற்று. துரதிர்ஷ்டவசமாக அதில்ஷாவும் நோயுற்று மரணமடைந்தார்.

6. அதில்ஷாவுக்குப் பிள்ளை இல்லாமையால் அவருடைய தம்பியாரின் புதல்வருக்கே பீஜப்பூர் இராச்சியம் உரியதாயிற்று. ஆனால், அவர் சிறு பிள்ளையாய் இருந்தமையால், சாந்து பீபியே அவருடைய பிரதிநிதியாய் இருந்து ஆட்சி புரிந்து வந்தார். ஒரு சிறிதும் ஒற்றுமையின்றிக் கலகம் செய்துகொண்டிருந்த பீஜப்பூர்க் குடிமக்கள் அவரது ஆட்சிக் காலத்தில் ஒற்றுமையுற்றார்கள். ஆகவே, நாட்டில் அமைதி குடிகொண்டது. அதன் பயனாகப் பீஜப்பூரின் மீது படையெடுத்து வந்த கோல்கொண்டாச் சுல்தான் தோல்வியுற்றுத் திரும்பினார். சாந்து பீபி போர் உடையணிந்து, பீஜப்பூர்ச் சேனையைத் தாமே நடத்தியதுதான் அவ்வெற்றிக்குக் காரணமாயிற்று.

7. சிறிது காலத்துக்குப் பிறகு, தக்க பருவமடைந்த சுல்தான், பீஜப்பூர் ஆட்சியை மேற்கொண்டார். சாந்து

பீபியும் அரசியல் காரியங்களை அவரிடம் ஒப்படைத்து-விட்டு, ஓய்வு பெற்றிருந்தார். அத்தருணத்தில் ஆமது நகரை ஆண்டு வந்த அரசர் மரணமடைந்தார். பட்டத்துக்குப் பலர் முயற்சி செய்தனர். அதனால், நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. அது கண்ட ஆமது நகரத்துக் குடிமக்களுள் ஒரு சாரார், தம் நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்குச் சாந்து பீபியின் உதவியை நாடினர். அவ்வம்மையாரும் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, ஆமது நகரம் சென்றார்; அரசுக்குரிய தம் தமையனாரின் பேரனுக்குப் பட்டம் சூட்டினார்; அரசியல் காரியங்களைத் தாமே கவனித்து வந்தார்.

8. அத்தருணத்தில் அக்பர் மகா சக்கரவர்த்தியாரின் நாட்டம் தட்சிணத்தின் மீது சென்றது. அவர் தம் மைந்தர் மூராது என்பவரை ஒரு பெரும்படையுடன் ஆமது நகரத்தின் மீது ஏவினார். மொகலாய சேனை ஆமது நகரை வளைத்துக்-கொண்டது. சாந்து பீபி போர்க் கவசமும் முகமூடியு-மணிந்து, வாளும் கேடயமும் கைகளில் தாங்கித் தம் சேனை-யின் முன் அணியில் நின்று சமர் செய்தார். அவருடைய வீரத்தைக்கண்ட அவர் படைவீரர்கள் வெறிகொண்டவர்-கள் போல மொகலாய வீரர்கள்மீது விழுந்து போர் புரிந்-தார்கள்.

9. அப்போரில் ஆமது நகரத்துக் கோட்டை மதில் ஓரிடத்தில் மொகலாய வீரர்களால் தகர்க்கப்பட்டது. அவ்-வழியின் மூலம் மொகலாய சேனை கோட்டைக்குள் நுழைய முயன்றது. அத்தருணம் ஆமது நகரத்துப் படைத்தலைவர் பின் வாங்க ஆரம்பித்தனர். அதுகண்ட சாந்துபீபி, விரை-வில் அவ்விடத்தை அடைந்தார்; தம் வீரர்களை நோக்கி, “வெற்றி வீரர்களே, தளகர்த்தர்களே, வீரனுடைய இலட்-சணம் யாது? போரில் புறங்காட்டி ஓடுவதா? நீவிர் அனைவீரும் ஆடவர். நீங்கள் போர் முனையை விட்டு ஓடுவதாயின், அங்ஙனமே செய்யுங்கள்; பெண்பாலாகிய

நான் மட்டும் நின்று போர் புரிகிறேன்! ஆமது நகரத்துக் கோட்டைக்குள் புகும் எதிரிகள் என் பிணத்தின்மீது நடந்து செல்லட்டும்!" என்று வீர மொழிகளைப் பகர்ந்தார். கேட்டனர் ஆமது நகரத்து வீரர்! மனம் வெட்கினர்! இழந்த தீரத்தை மீண்டும் பெற்று ஆரவாரித்துப் பகைவர் மீது பாய்ந்தனர்! சிறிது நேரத்தில் மொகலாய சேனை முதுகுகாட்டி ஓட்டமெடுத்தது. ஆமது நகரத்துக்கு வெற்றி கிடைத்தது.

10. பகைவர் பயம் ஒழிந்தவுடனே ஆமது நகரத்துப் பிரபுக்கள் பழையபடி தங்கள் கட்சிப் போராட்டங்களைத் தொடங்கினர்கள். நான்கு ஆண்டுகள் இங்ஙிலையிற் கழிந்தன. இதையறிந்த மொகலாயர், மீண்டும் ஆமது நகரத்தை முற்றுகையிட்டனர். அப்போது சாந்து பீபியை ஆமது நகரத்தைச் சார்ந்த துரோகிகளுள் சிலர், ஒரு சூழ்ச்சியால் கொலை செய்தனர். எனவே, ஆமது நகரம் எளிதில் பகைவர் வசமாயிற்று. நாட்டுப் பற்றும், அரச விசுவாசமும் அற்றுச் சாந்து பீபியை வஞ்சனையாற் கொல்வித்த பிரபுக்களும் அவர்களுடைய படை வீரர்களும் இறுதியில் எதிரிகளின் வாளுக்கு இரையானர்கள். 'முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும்,' என்னும் முது-மொழி அவர்கள் விஷயத்தில் உண்மையாயிற்று. ஆனல், வீரமும், தியாகமும், நாட்டுப் பற்றும் மிக்க வீரமங்கையரான சாந்து பீபியின் புகழ், இந்திய நாட்டுச் சரித்திரத்தில் இடம் பெற்று விளங்குகிறது!

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. சாந்து பீபி யார்? அவர் பிறப்பிடம் எது? அவர் தந்தையார் யார்?

ஆ. சாந்து பீபியின் தோற்றம் எப்படிப்பட்டது?

இ. சாந்து பீபி யாரை மணந்தார்? அவருக்கும் அவர் கணவருக்கும் இருந்த குறை யாது?

ஈ. கோல்கொண்டாச் சுல்தான் தோல்வியடைந்ததற்குக் காரணம் என்ன ?

உ. சாந்து பீபியின் எந்தச் செயல் அவருடைய புகழுக்குக் காரணமாயிற்று ?

ஊ. சாந்து பீபியின் சிறப்பியல்புகள் எவை ?

II. கீழ் வரும் வாக்கியங்களை நகக்குறியினுள் இருக்கும் பதங்களைக்கொண்டு தொடங்கி எழுது :—

1. சாந்துபீபி பீஜப்பூரை ஆட்சி புரிந்தார். (பீஜப்பூர்)
2. நைஜாம் ஷா சாந்து பீபியை எப்போதும் தம்முடனே வைத்து வளர்த்து வந்தார். (சாந்து பீபி)
3. மன்னர்கள் அவரை விரும்பினார்கள். (அவர்)
4. கோல்கொண்டாச் சுல்தான் பீஜப்பூர்மீது படையெடுத்தார். (பீஜப்பூர்)

III. எதிர்ப்பதங்கள் எழுது :—

அரசியார், புதல்வி, சண்டை, நேசித்து, குழப்பம், சக்கரவர்த்தி, ஆண்பால், பகைவன், வெற்றி



22. நிலா

முழுமைநிலா அழகுநிலா
 முளைத்ததுவிண் மேலே—அது
பழமையிலே புதுநினைவு
 பாய்ந்தெழுந்தாற் போலே!
அழுதமுகம் சிரித்ததுபோல்
 அல்லிவிரிந் தாற்போல்—மேல்
சுழற்றிஎறிந்த வெள்ளித்தட்டுத்
 தொத்திக்கிடந் தாற்போல்

—முழுமைநிலா அழகுநிலா 1

குருட்டுவிழியும் திறந்ததுபோல்
 இருட்டில்வான விளக்கு!—நம்
பொருட்டுவந்தது பாடிஆடிப்
 பொழுதுபோக்கத் துவக்கு!
மரத்தின்அடியில் நிலவுவெளிச்சம்
 மயிலின்தோகை விழிகள்!—பிற
தெருக்கள்எல்லாம் குளிரும்ஒளியும்
 சேர்ந்துமெழுகும் வழிகள்!

—முழுமைநிலா அழகுநிலா 2

—பாரதி தாசன்

விளையாட்டு—6

அரசு :—மணி, இராமா, ஜான், ஹுசேன், இங்கே வாருங்கள். இன்றைக்கொரு புதிய விளையாட்டு விளையாடலாம்.

மணி :—அஃது என்ன விளையாட்டு?

அரசு :—சொல்கிறேன்; கவனித்துக் கேளுங்கள்: உங்கள் நோட்டுக்களையும், பென்ஸில்களையும் சித்தமாக வைத்துக்கொள்ளுங்கள்.

ஜான் :—வைத்துக்கொண்டோம். இனி என்ன செய்ய வேண்டும்?

அரசு :—கரும்பலகையில் பத்து வார்த்தை எழுதுகிறேன். நீங்கள் அவற்றை நன்றாய்க் கவனிக்க வேண்டும். இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அச்சொற்களை அழித்துவிடுவேன். உடனே நீங்கள் அந்தப் பத்துச் சொற்களையும் அவை இருந்த அதே வரிசையில் எழுதிவிட வேண்டும். விளங்குகிறதா?

ஹுசேன் :—விளங்குகிறது, எழுது; பார்ப்போம்.

அரசு :—நீங்கள் மறு பக்கம் திரும்புங்கள். நான் எழுதி முடித்துவிட்டு, "சித்தம்" என்பேன். அப்போது நீங்கள் திரும்பலாம். திரும்புங்கள்.

குயில்	பாண்டவர்
கோட்டை	மதுரை
சுண்ணம்பு	மங்கம்மாள்
சொக்கட்டான்	புகை வண்டி
ஒட்டகம்	போக்குவரவு

"சித்தம்." இரண்டு நிமிஷ நேரந்தான் நீங்கள் இச் சொற்களைக் கவனிக்கலாம். ஐந்து நிமிஷ நேரத்திற்குள் எழுதி முடிக்க வேண்டும். இரண்டு நிமிஷங்கள் ஆகிவிட்டன. இச்சொற்களை அழித்து விடுகிறேன். எழுதுங்கள் சீக்கிரம்!

23. பகலும் இரவும்

(பாட்டு)

இந்திய நாட்டினிற் பகல்எனும் போது,
ஈடில் புதுவுலகில் இரவென ஓது ;

காலையில் கதிரவன் உதித்தனன் இங்கு ;
கண்விழித் தெழுந்தனர் மாந்தர்கள் நன்கு ;

இந்நேரம் சூரியன் மறைகுவன் ஆங்கே
இல்லத்துக் கேகுவர் தொழில்தனை நீங்கி ;

சிற்றுண்டி யுட்கொளும் காலையாம் நமக்கு ;
சேரிருள் தங்கிடும் நடுநிசி அவர்க்கு ;

பண்புடன் இங்குநம் தொழில்தனை நாடி,
பாங்குடன் செல்லுவோம் கூட்டமாய்க் கூடி ;

இரவுண வின்பினங் கெத்தனை கோடி
இன்பமாய்க் காட்சிகள் காணுவர் தேடி !

இங்குநாம் வெயிலினை இகழுமிந் நேரம்
எழிலுறு நிலவங்குப் போற்றுவர் யாரும் ;

சிற்சில நாட்டினில் பகலாறு மாதம்
செறிந்துபின் தங்கிடும் இருளாறு மாதம்.

—T. S. உமாபதி

குறிப்பு :—இஃது ஓர் ஆங்கிலக் கவிதையைத் தழுவி எழுதப்பட்டது.

24. ஸ்தல சுய ஆட்சி - ஜில்லா போர்டு

1. நமது நாடு சில பெரிய அரசியல் பிரிவுகளாய் வகுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவுக்கும் 'மாகாணம்' என்பது பெயர். நாம் வசிப்பது சென்னை மாகாணம். ஒவ்வொரு மாகாணமும் பல சிறு பிரிவுகளாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகள், 'ஜில்லாக்கள்' எனப்படும்.

2. ஒவ்வொரு ஜில்லாவிலும் வாழும் மக்கள் அந்தந்த ஜில்லாவில் தங்களுக்கு வேண்டிய வசதிகளைத் தாங்களே அமைத்துக்கொள்ளத் தக்க ஆட்சி முறை ஒன்றை அரசாங்கத்தார் ஏற்படுத்தியுள்ளனர். இந்த முறைப்படி மாந்தர் தாந்தாம் வாழும் தலத்திற்கு அவசியமான பொது நலக் காரியங்களைச் செய்துகொள்ளும் அதிகாரம் பெற்றுள்ளனர். இந்த அதிகாரத்தை வகிக்கும் ஒரு சபை ஒவ்வொரு ஜில்லாவிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஜில்லா போர்டு என்னும் பெயர் வழங்குகிறது.

3. ஜில்லா போர்டை ஜில்லாப் பரிபாலன சபை என்று கூறலாம். இச்சபையின் அங்கத்தினர்கள் ஜில்லாவில் வசிக்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். இச்சபையில் ஜில்லாவின் விஸ்தீரணத்துக்குத் தக்கபடி இருபத்துநான்கு பேருக்குக் குறையாமலும் ஐம்பத்திரண்டு பேருக்கு மேற்படாமலும் அங்கத்தினர் இருப்பர். இவர்கள் ஜில்லாவாசிகளால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள்.

4. ஜில்லாச் சபையின் அங்கத்தினர் மூன்றாண்டுகள் வரையிலேதான் பதவி வகிக்கலாம். இவர்கள் ஊதியம் பெறுவதில்லை. இவர்கள் மக்கள் நன்மையைக் கோரியும், கௌரவத்தை முன்னிட்டும் தொண்டாற்றக் கடமைப் பட்டவர்கள். இவர்கள் தங்களுள் தலைவர் ஒருவரையும்,

துணைத் தலைவர் ஒருவரையும் தேர்ந்தெடுப்பார்கள். இத் தலைவர்களும் ஊதியமின்றித் தொண்டாற்றக் கடமைப் பட்டவர்களே. தலைவர், அங்கத்தினருள் பெரும்பாலாரின் கருத்துக்களுக்கு உட்பட்டுச் சபையின் காரியங்களை நடத்தி வைப்பார். தலைவர் சபைக்கு வாராத காலங்களில் துணைத் தலைவர் சபையின் காரியங்களை நடத்தி வைப்பார்.

5. ஜில்லாச் சபையின் கடமைகள் யாவை என்பதைக் கவனிப்போம்: ஜில்லா வாசிகளுள் சிறுவர் சிறுமியரின் கல்வி அபிவிருத்திக்கு ஏற்பன செய்தல் இச்சபையின் கடமைகளுள் ஒன்றாகும். கிராமங்களின் முன்னேற்றத்-துக்கான காரியங்களைக் கவனித்தல் மற்றொரு கடமை. கிராமப் பஞ்சாயத்துக்கள், சுகாதாரம், மராமத்து, போக்கு-வரவு சாதனங்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து குடிகளுக்கு நன்மை புரிவதே ஜில்லாச் சபையின் வேலை.

6. இவ்வேலைகளைக் கவனிக்க ஜில்லாச் சபையில் சில உட்சபைகள் அமைக்கப்படும். கல்வி முன்னேற்றத்தை-யும், கிராம முன்னேற்றத்தையும் கவனிப்பது ஒரு சபை. சுகாதார அபிவிருத்தியையும், மராமத்துக் காரியங்களையுங்-கவனிப்பது ஒரு சபை; கிராமப் பஞ்சாயத்துக்களைக் கவ-னிப்பது ஒரு சபை; போக்குவரவு சாதனங்களைக் கண்கா-ணிப்பது ஒரு சபை. இவ்வாறு அமைக்கப்படும் குழுக்-களில் ஜில்லாச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படாதவர்களும் அங்கத்தினர்களாய் இருப்பார்கள். ஆனால், இவர்களுக்குச் சபையின் விவாதங்களில் ஓட்டு அளிக்கும் உரிமை இல்லை. ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைவர் இருப்பார். அவர் குழுவின் அங்கத்தினர்களால் அவர்களுள்ளேயே தேர்ந்-தெடுக்கப்படுவார். ஜில்லாச் சபைத் தலைவர் ஒவ்வொரு குழுவிலும் இடம் பெறும் உரிமையுடையவர்.

7. ஜில்லாச் சபை செய்யவேண்டிய காரியங்களுக்கு அவசியமான பணம் எங்கிருந்து கிடைக்கிறது? அரசாங்-

கத்தார் தாம் வசூலிக்கும் நிலவரியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை ஜில்லாச் சபைக்குக் கொடுக்கின்றனர். இதுவன்றி, ஏரி குளங்களில் மீன் பிடித்தற் குத்தகை, காட்டுக் குத்தகை முதலிய குத்தகைப் பணம் இச்சபைக்குக் கிடைக்கிறது. மேலும், வீட்டு வரி, உத்தியோக வரி, யாத்திரிகர் வரி முதலிய வரிகளின் மூலமாகவும் சபைக்குப் பணம் கிடைக்கிறது. இவற்றைக்கொண்டுதான் ஜில்லாச் சபையார் தம் கடமைகளை நிறைவேற்றுகின்றனர்.

8. ஜில்லாச் சபையின் நிருவாகம் அரசாங்கத்தாரின் கொள்கைக்கும், சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு நடைபெறுதல் வேண்டும். அரசாங்கத்தார் இஷ்டப்பட்டால், சபையைக் கலைக்கவும், சபைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கவும் முடியும். ஆதலால், சபைத்தலைவர் ஒவ்வோராண்டின் இறுதியிலும், சபையின் வரவு செலவுகள் அடங்கிய அறிக்கையைச் சபையாருடைய அனுமதியுடன் அரசியலார்க்கு அனுப்பி வைக்க வேண்டும்.

9. ஜில்லாச் சபை அங்கத்தினர்கள் மூன்றாண்டுகள் மட்டும் பதவி வகித்தாலும், ஊதியமின்றித் தொண்டாற்றினாலும், பல உரிமைகளைப் பெற்றுள்ளார்கள். ஜில்லாச் சபையின் பதிவுப் புத்தகங்களைப் பார்வையிடும் உரிமை அவர்களுக்குண்டு; தலைவரை நேர்மையான முறையில் கேள்விகள் கேட்க உரிமையுண்டு; சபையின் கூட்டங்களில் தாங்கள் ஜில்லாவுக்குச் செய்ய விரும்பும் நற்காரியங்கள் சம்பந்தமான தீர்மானங்களைப் பிரேரேபிக்கும் உரிமையுண்டு. ஜில்லா போர்டு வேலையாட்களோ, அன்றித் தலைவரோ, அன்றிச் சபையோ தவறான முறைகளை அனுசரித்தால், அவற்றைக் கண்டிக்கும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. இத்தனை உரிமைகளையும் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய அறிவும் திறமையும் உடையவர்களை அங்கத்தினராகக்கொண்ட சபைதான் ஜில்லா வாசிகளுக்கு நன்மை புரியக் கூடும்.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. 'ஜில்லா' என்பது என்ன ?

ஆ. 'ஜில்லா போர்டு' என்பது என்ன ?

இ. ஜில்லாச் சபையின் வேலைகள் யாவை ?

ஈ. ஜில்லாச் சபை எவ்வழிகளில் வருமானம் பெறுகிறது ?

உ. ஜில்லாச் சபை அங்கத்தினரின் உரிமைகள் யாவை ?

II. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்து :—

1. நமது நாடு பல பெரிய மாகாணங்களாய்ப் பிரிக்கப்பட்டுள்ளன.
2. சபையின் அங்கத்தினர் பொது மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.
3. சபையின் காரியங்கள் தலைவரால் கவனிப்பர்.
4. அரசாங்கத்தார் ஜில்லாச் சபைக்கு உதவி செய்கின்றது.

III. நான் வருகிறேன். (உடன்பாடு)

நான் வாரேன். (எதிர்மறை)

கீழ் வரும் வாக்கியங்களில் உடன்பாட்டை எதிர்மறையாகவும், எதிர்மறையை உடன்பாடாகவும் மாற்றி எழுது :—

1. தமக்கு வேண்டியவற்றைத் தாமே செய்வர்.
2. இன்று யான் பள்ளிக்குச் செல்லேன்.
3. கண்ணன் வெண்ணெய் உண்பான்.
4. மணியோசை இவ்வளவு தூரம் கேளாது.
5. அருச்சுனன் கன்னனை வெல்வான்.
6. துரியோதனன் நாடு கொடான்.

25. இருப்புப்பாதை வண்டித் தொடர்

1. நீ புகை வண்டியில் பிரயாணம் செய்திருக்கிறாய் அல்லவா? அது எவ்வளவு வேகமாய் ஓடுகிறது! அதை அவ்வளவு வேகமாய் ஓடச் செய்யும் சக்தி யாது? அதுவே நீராவியின் சக்தியாகும். உலகம் தோன்றிய காலம் முதல் நீராவி என்பது இருந்து வந்தது. ஆனால், இருநூறு ஆண்டுகளுக்கு முன்புதான் நீராவிக்கு அத்தகைய சக்தி உண்டு என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதுவும் உன்னைப் போன்ற ஒரு சிறுவனாலேதான் கண்டு பிடிக்கப்பட்டது.



2. நீராவியின் சக்தியைக் கண்டறிந்த சிறுவன் பெயர் 'ஜேம்ஸ் வாட்டு' என்பது. அவன் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குமுன் இங்கிலாந்து தேசத்திற் பிறந்தவன். ஒரு நாள் அவன் தன் பெற்றோருடன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். ஆங்கிலேயர் தம் உணவை மேசைமீது வைத்துக்கொண்டு சாப்பிடுவது வழக்கம். ஜேம்ஸ் சாப்பிட்டுக்கொண்டிருந்த மேசையின் அருகில் ஓர் அடுப்பு

எரிந்துகொண்டிருந்தது. அதன்மீது மூடியிட்ட பாத்திரத்தில் நீர் காய்ந்துகொண்டிருந்தது.

3. ஜேம்ஸ் சாப்பிட்டுக்கொண்டிருந்த போது 'பட், பட்' என்ற சத்தம் கேட்டது. அஃது அடுப்பின் பக்கமிருந்து வந்ததென ஜேம்ஸ் அறிந்தான். உடனே அவன் அந்தச் சத்தத்திற்குக் காரணம் என்ன என்பதைக் கவனித்தான். பாத்திரத்தில் வெந்நீர் கொதித்துக்கொண்டிருந்தது. அதிலிருந்து வெளிப்பட்ட நீராவி, கொப்பரையின் மேல்மூடியைத் தூக்கித் தூக்கி எறிவதைக் கண்டான்.

4. ஜேம்ஸ் சிறுவனுயினும், நல்ல புத்திசாலி. அவன் ஒரு சிறு பாத்திரத்தில் உள்ள வெந்நீரிலிருந்து உண்டாகும் நீராவிக்கு அவ்வளவு சத்தி இருக்குமானல், மிகப் பெரிய பாத்திரங்களினுள்ளிருந்து வரும் நீராவிக்கு எவ்வளவு அதிகமான சத்தி இருக்க வேண்டும் என்பதை ஆலோசித்தான்; அச்சத்தி மிகக்கடினமான வேலையையும் எளிதாய்ச் செய்யும் என்ற முடிவுக்கு வந்தான்.

5. அதுமுதல் ஜேம்ஸின் எண்ணம் நீராவியின் சத்தியால் இயங்கக்கூடிய ஓர் இயந்திரத்தை அமைப்பதிலேயே ஈடுபட்டது. சில ஆண்டுகளுக்குள் ஜேம்ஸ் வாட்டு, நீராவியின் சத்தியால் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றைச் செய்து முடித்தான். அஃது ஒரே இடத்திலிருந்து வேலை செய்யும் தன்மையுடையது.

6. அதன் பிறகு, நீராவியின் சத்தியால் தானே ஓடக்கூடிய வண்டி ஒன்றைச் செய்வதற்குப் பலர் முயற்சி செய்தனர். அவர்களுள் 'கியூனே' என்பவர் ஒருவர். அவர் பிரான்ஸ் தேசத்தவர். அவர் மூன்று சக்கர வண்டி ஒன்றைச் செய்தார்; அதில் நீராவி உண்டாவதற்கு அகன்ற செப்புக் குழாய்க் கொப்பரை ஒன்ற அமைத்தார். அவ்வண்டியில் நான்கு பிரயாணிகள் ஏறிக்கொண்டார்கள். கியூனேவே அதைச் செலுத்தினர். அது மணிக்கு

மூன்று மைல் வேகத்துடன் ஓடிற்று. அதைக் கண்ட பிரெஞ்சு மக்கள் சந்தோஷம் அடைவதற்கு மாறாகக் கியூனேவையும், அவர் செய்த வண்டியையும் சபித்தார்கள்.

7. அதன் பிறகும் நீராவியின் சக்தியால் வண்டியை இயக்கப் பலர் முயன்றனர். அவர்களுள் வெற்றிபெற்றவர், 'ஜார்ஜ் ஸ்டீவென்ஸன்' என்பவர். அவர் மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்தவர். ஆதலால், அவர் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்படவில்லை. இளமையில் அவர் ஒரு தனவந்தருடைய மாடுகளை மேய்த்து வந்தார்; பிறகு தம் தந்தையார் வேலை செய்து வந்த நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைக்கு அமர்ந்தார்.

8. அவர் அங்கு நிலக்கரியை மேலும் கீழும் தூக்கிச் சென்ற இயந்திரத்தைக் கண்டார். அதைப்போன்ற ஓர் இயந்திரத்தைச் செய்ய வேண்டும் என்று அவர் உறுதி கொண்டார்; அதற்காகக் கல்வி கற்கத் தொடங்கினர். பள்ளிக்கூடத்தையே கண்டறியாத அவர், வெகு சீக்கிரத்தில் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார்.

9. பிறகு ஸ்டீவென்ஸன் சில ஆண்டுகளை இயந்திரங்களைப் பற்றிய நூல்களைப் படிப்பதிலும், மாதிரி இயந்திரங்கள் செய்வதிலும் கழித்தார். அவருடைய திறமையைக் கண்ட சுரங்க முதலாளர் எல்லா இயந்திரங்களின் பொறுப்பையும் அவரிடம் விட்டார். அப்போது அவர் நீராவி இயந்திரம் ஒன்று செய்தார்; முதலாளரின் அனுமதி பெற்று அதைச் சுரங்கத்தில் சுமை தூக்கிச் செல்ல உபயோகித்தார். அதைக் கேட்ட அனைவரும் ஸ்டீவென்ஸனுடைய இயந்திரத்தால் என்றைக்கேனும் சுரங்கம் தீப்பிடிப்பது திண்ணம் என்று பயந்தனர்.

10. சிறிது காலத்துக்குப் பிறகு தண்டவாளத்தின் மீது வண்டிகளை இழுத்துச்செல்லக்கூடிய ஓர் இயந்திரத்தை ஸ்டீவென்ஸன் செய்து முடித்தார். அதற்கு 'லோக்கோ

மோட்டிவ்', 'ராக்கெட்டு' என்னும் பெயர்கள் வழங்கலாயின. அதுவே முதல் ரெயில்வே இஞ்சின் ஆகும்.

11. அதன் பிறகு அவரைப் பின் பற்றிப் பலரால் புகை வண்டிகள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டன. இன்று புகை வண்டி மணிக்கு எழுபது மைல் வேகம் செல்கின்றது. அதனல், ஏற்படும் நன்மைகளும் உனக்குத் தெரியும். இவற்றிற்கெல்லாம் காரணம் உன்னைப் போன்ற ஒரு சிறுவனுடைய கூர்ந்த அறிவும் விடா முயற்சியுமே அல்லவா? ஆங்கிலத்தில் 'ரெயில்வே டிரெய்ன்' என்பது புகை வண்டித் தொடரைக் குறிக்கின்றது. 'ரெயில்வே' என்பதற்கு 'இருப்புப்பாதை' என்பது பொருள். 'டிரெய்ன்' என்பதற்கு 'வண்டித் தொடர்' என்பது பொருள். ஆகவே, நாம் சுருக்கமாக 'ரெயில்வே' என்று வழங்குகிறோம்; வண்டித் தொடரை இழுத்துச் செல்லும் இயந்திரம் புகை விட்டுக்-கொண்டு செல்வதால், 'புகை வண்டித் தொடர்' என்றும் கூறுகிறோம்.



பயிற்சி :

I. விடை எழுது :—

அ. நீராவியின் சக்தியைக் கண்டு பிடித்தவன் யார்? அவன் எப்படிக் கண்டு பிடித்தான்?

ஆ. 'கியூஞே' என்பவர் யார்? அவர் கண்டு பிடித்தது என்ன?

இ. 'ஜார்ஜ் ஸ்டீவென்ஸன்' யார்? அவர் கண்டு பிடித்த புதிய இயந்திரங்கள் யாவை?

ஈ. 'ரெயில்வே டிரெய்ன்' என்பதற்குப் பொருள் என்ன?

II. பின் வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துச் சொற்களுக்குப் பதில் பொருள் வேறுபாடில்லாமல் வேறு சொற்களை அமைத்தெழுது :—

அ. புகை **வண்டி** வேகமாகச் செல்லும்.

ஆ. அச்சிறுவன் தன் பெற்றேருடன் அமர்ந்து சாப்பிட்டுக்-கொண்டிருந்தான்.

இ. அவர் மிகவும் எளிய குடும்பத்தில் உதித்தவர்.

ஈ. அவர் இயந்திரங்களைப்பற்றிய நூல்களைக் கற்பதில் காலத்தைச் செலவிட்டார்.

III. கீழ் வரும் தொடர்களைப் பிரித்தெழுது :—

மாங்காய், பனங்காய், காதோலை, மட்சுவர்,
நெற்பொரி, சங்கோசை, மண்ணுசை

IV. கீழ் வரும் சொற்களைச் சேர்த்தெழுது :—

பக்கம் + இருந்து =
நீரில் + இருந்து =
கண்டு + அறியாத =
இவற்றுக்கு + எல்லாம் =
தீ + அணைத்தான் =
பனை + ஓலை =

26. 'நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.'

1. ஓர் அரசர் ஒரு நாள் தம் பரிவாரங்களுடன் வேட்டையாடச் சென்றார். சென்ற வழியில் ஒரு பெரியார் அமர்ந்திருந்தார். அவர் அரசரைக் கண்ட போது, "மன்னரே, நீர் எமக்கு நூறு பொன் தருவீராயின், உமக்கு யாம் ஒரு பொன் மொழி புகலுவோம்," என்றார். அதை மன்னரின் பரிவாரங்கள் ஒரு சிறிதும் பொருட்படுத்தவில்லை. ஆனால், அரசர், பெரியாருக்கு நூறு பொன்னை அளித்து, "பெரியீர், அந்நல்லுரையைக் கூறியருளும்," என்றார்.

2. அப்பெரியார் நூறு பொன்னைப் பெற்றுக்கொண்டு, ஒரு பனையோலைத் துணுக்கில், 'நுண்ணிய கருமமும் எண்ணித் துணி,' என்று எழுதி, அரசரிடம் கொடுத்தார். அது கண்ட அரசரின் பிரதானிகள் நகைத்தார்கள். அரசர், "நீங்கள் உங்கள் அறியாமையால் சிரிக்கிறீர்கள். உண்மையில் இஃது ஒப்பற்ற ஒரு பொன் மொழியே. இதன் பெருமையை நீங்கள் இப்போது அறியவில்லை," என்றார்.

3. வேட்டை முடிந்த பின் அரசர் அரண்மனையை அடைந்தார்; காட்டில் நூறு பொன்னுக்குப் பெற்ற உபதேச மொழிகளைக் கதவுகளின்மீதும், சுவர்களின்மீதும், பாத்திரங்களின்மீதும் பொறிக்கச் செய்தார்.

4. சில நாட்கள் கழிந்தன. வேந்தருடைய பிரதானிகளுள் ஒருவன் அவரிடம் பகை கொண்டான்; அவரைக் கொன்றுவிட்டு அரசை அபகரிக்க எண்ணினான். அவன் அரண்மனை வைத்தியனிடம் சென்று, "வைத்தியரே, நான்

தரும் இப்பாஷாணத்தை நீர் அரசருக்குக் கொடுத்து-விட்டால், உமக்கும் எனக்கும் எவ்விதக் குறைவும் இல்லை. நான் அரசனாவேன்; நீர் மந்திரியாராவீர். இதோ! இப்பண முடிப்பையும் வைத்துக்கொள்ளும்,'' என்று கூறி, அவ-னிடம் ஒரு பணமுடிப்பையும் பாஷாணத்தையும் தந்தான்.

5. பண ஆசையாலும், மந்திரியாகலாம் என்ற பதவி மோகத்தாலும், அம்மருத்துவன் பிரதானியின் விருப்பத்-திற்கு இணங்கினான்; விஷத்தையும் பணத்தையும் பெற்றுக்கொண்டான்.

6. அவன் மேற்கொண்ட வேலையைச் செய்து முடிக்-கத் தக்க தருணத்துக்காகக் காத்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் அரசருக்குக் காய்ச்சல் கண்டது. வைத்தியன் அழைக்கப்பட்டான். அவன் அத்தருணத்தை இழந்து-விடக் கூடாதென எண்ணி, பிரதானி கொடுத்த விஷத்-தையும், வேறு சில மருந்துகளையும் எடுத்துக்கொண்டு அரண்மனையை அடைந்தான்; அரசரின் உடலைச் சோதித்-தான்; உடனே ஒரு பாத்திரம் கொண்டுவரச் சொன்னான்; அதற்குள் தன்னிடமிருந்த விஷத்தை எடுத்து வைத்துக்-கொண்டான். பாத்திரம் கொண்டு வரப்பட்டது. அதைக் கையில் வாங்கிய போது அதன்மீது, 'நுண்ணிய கருமமும் எண்ணித் துணி,' என்று பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டான்; சிறிது திகைத்தான். அவனுக்கு நல்லறிவு பிறந்தது. அவன் தன் தவற்றை உணர்ந்தான். உடனே அவன் கை கால்கள் நடுங்கின. அவன் கையிலிருந்த நஞ்சைப் பையுள் வைத்துவிட்டு, வேறொரு மருந்துக் குப்பியை எடுத்தான்.

7. மருந்து மாற்றப்பட்டதையும், மருத்துவன் முகத்-திற் காணப்பட்ட மாறுபாட்டையும் மன்னர் கண்டார். அவருக்கு அவனிடம் ஐயம் ஏற்பட்டது; உண்மையைக் கூறும்படி அவனைக் கேட்டார். வைத்தியன் உண்மையைக் கூறிவிட்டான்.

8. உடனே அரசர் சிறிதும் காலம் தாழ்த்தாமல் பிரதானியைக் கொல்வித்தார்; மருத்துவனையும் அரண்மனை உத்தியோகத்திலிருந்து நீக்கினார்; பிறகு தம் பிரதானிகளை நோக்கி, “நீங்கள் அன்று அப்பெரியாருக்கு நூறு பொன் கொடுத்துப் பெற்ற பொன்மொழியை அலட்சியமாய் எண்ணி நகைத்தீர்கள். ஆனால், இன்று என் உயிரைக் காப்பாற்றியது அதுவேயன்றோ? ஆதலால், நாம் எதையும் ஆழ்ந்து ஆலோசிக்காமல் இகழ்வது தகுதி அன்று,” என்றார். பிரதானிகள் ஒன்றும் பேசவில்லை.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. அரசர் எங்குச் சென்றார்? வழியில் யாரைக் கண்டார்?

ஆ. அரசர் பெரியாரிடமிருந்து என்ன பெற்றார்? அப்போது பிரதானிகள் என்ன செய்தார்கள்?

இ. அரசருடைய பகைவன் அரசரைக் கொல்ல என்ன ஏற்பாடு செய்தான்?

ஈ. மருத்துவன் தான் எண்ணிய காரியத்தைச் சாதிக்க முடியாமற் போனதற்குக் காரணம் என்ன?

உ. இக்கதையால் அறியப்படும் நீதி யாது?

II. இப்பாடத்தில் ‘விஷம், அரசர்’ என்னும் சொற்பொருளில் வந்துள்ள மற்றச் சொற்கள் எவை?

III. இப்பாடத்தின் முதற்பத்தியில் உள்ள முதல் இரண்டு வாக்கியங்களையும், நான்காம் பத்தியிலுள்ள முதல் மூன்று வாக்கியங்களையும் சேர்த்து எழுது.

27. பத்திரிகைச் செய்தி—II

'தமிழ் ஒப்பில்லாச் சிறப்பு வாய்ந்தது!
அதை வளர்ப்பதே நமது கடமை.'

ஸர். சி. பி.யின் பிரசங்கம்

சென்னை, நவ. 18—

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக ஸர். சி. பி. இராமசாமி ஐயருக்கு நேற்று மாலை ஓர் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. திரு. வி. வி. சீனிவாச ஐயங்கார் தலைமை வகித்தார்.

தலைவர், தமிழ் மொழி பழைமையான சிறப்பு மிக்க பாஷைகளுள் ஒன்ருகுமென்றும், அதில் பிரசித்தி பெற்ற இலக்கியங்கள் இருக்கின்றன என்றும், எல்லாரும் தாய்ப் பாஷையாகிய தமிழைக் கற்று இலக்கியச் சுவைகளை அனுபவிக்க வேண்டுமென்றும் கூறினார்.

ஸர். இராமசாமி ஐயர் கூறியதாவது:

"தமிழ்க் கலைக்கும், தமிழ்ப் பண்டிதர்களுக்கும் ஆதரவு குறைந்திருக்கிறதென்ருல், அதற்குக் காரணம், தமிழ்ப் பாஷைக்கு விரோதமாய் இருக்கின்றவர்கள் அல்லர். தமிழினிடம் பற்றுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்கின்றவர்களே என்று நான் திடமாய்க் கூறுவேன். தமிழ்ப்பாஷை ஒன்றுதான் சிறந்தது என்று சொல்கிறவர்கள், எந்தப் பண்பும், எந்த நாகரிகமும், மனிதனுடைய எந்த முயற்சியும் பூரணமானவை அல்ல என்னும் உண்மையை மறந்துவிடுகின்ருர்கள். தமிழும் சம்ஸ்கிருதமும் தொன்றுதொட்டு ஒன்றினிட்மிருந்து ஒன்று பல பண்புகளைப் பெற்றும், ஒன்றுக்கொன்று கொடுத்தும் இருக்கின்றன. தமிழ் தார்மிக லௌகிக வாழ்க்கைகளில் மிகவும் முக்கியமானது. இரண்டு பாஷைகளும் சமச் சிறப்பு வாய்ந்தவை. தமிழ் மொழியின் சிறப்பு வேறு எந்த மொழியின் சிறப்போடும் போட்டியிட

முடியும். அபிப்பிராயங்களைச் சுருக்கமாகத் தெரிவிப்பதில் சம்ஸ்கிருதத்தைவிடத் தமிழ் உயர்ந்தது. பத்தி நூல்களைப் பற்றிய வரையில் தமிழோடு வேறு எந்த மொழியும் போட்டி போட முடியாது.

"நான் தமிழ் மொழியில் உள்ள தார்மிக லௌகிக நூல்களைப்பற்றிப் பெருமை பாராட்டுகிறேன். ஆனால், தப்பான முறையில் கொண்டாடுவது தமிழைப் பாதுகாப்பது ஆகாது. அதைப் பிறருக்குக் கொடுத்துப் பயனுள்ளதாக நாம் செய்ய வேண்டும். தமிழ் மொழியை நன்கு கற்று, இலக்கியச் சுவைகளைக் கண்டறிந்து, அவைகளை வளர்க்க வேண்டுவது வாலிபர்களின் கடமையாகும்.

"தமிழ் மொழி இரண்டு வகையாகும்: பண்டைக்காலத் தமிழ் ஒருவகை. அதைப் படிப்பதில் மூளையை எவ்வளவு செலவழித்தாலும், ஒன்றும் புரிந்துகொள்ள முடிவதில்லை. பத்திரிகைத் தமிழ் இரண்டாவது. அஃது அருவருப்பான முறையில் இயங்கி வருகிறது. தற்காலத்தில் தோன்றியிருக்கும் செயல்களையும் எண்ணங்களையும் விளக்கக்கூடியதும், பாமரர்கள் அறிந்துகொள்ளக் கூடியதும், தேசத்தில் ஏற்பட்டுள்ள தீவிர உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கக்கூடியதுமான தமிழ் மொழியை நாம் வளர்க்க வேண்டும்."

ஸ்ரீ. வி. கே. பார்த்தசாரதி ஐயங்கார் வந்தனோபசாரம் கூறினார்.

பயிற்சி:

விடை எழுது :—

அ. ஸர். சி. பி. இராமசாமி ஐயருக்குச் சங்கத்தார் என்ன அளித்தனர்?

ஆ. தலைவர் தமிழ் மொழியைப் பற்றிக் கூறியது என்ன?

இ. தமிழுக்கும் சம்ஸ்கிருதத்துக்கும் உள்ள தொடர்புகள் யாவை?

ஈ. இக்காலத்தில் வழங்கும் இரண்டு வகைத் தமிழிலும் உள்ள குறைபாடுகள் எவை?

28. உயிர்ப் பாதுகாப்பு முறைகள்

ஓடும் டிராமிலிருந்து இறங்கியவர் கீழே விழுந்து மாண்ட பரிதாபம் !

சென்னை, நவ. 1—

நேற்று மாலை மவுண்ட்ரோடு எல்பின்ஸ்டன் டாக்கீஸ் அருகில் ஓடிக்கொண்டிருந்த டிராம் வண்டியிலிருந்து இறங்கிய போது, இராயப்பேட்டை முத்து முதலி தெருவில் வசிக்கும் 42 வயதான சிவானந்த ஆசாரி என்பவர் படுகாயம் அடைந்தார். அவர் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்குச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் இறந்துவிட்டார்.

வாலிபன் மரணம் :
ஓடும் பஸ்ஸிலிருந்து இறங்கினான்.

சென்னை, நவ. 8—

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து இறங்கித் தவறி விழுந்ததால், கோவிந்தன் என்னும் 15 வயது வாலிபன், தலையில் பலத்த காயம் அடைந்தான். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் அவன் மரணமானான். இந்தச் சம்பவம் கோட்டை இரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் நடந்தது.

மாணவன் பரிதாப மரணம் :
சாலையின் குறுக்கே பந்து எடுக்க ஓடினானும்.

சென்னை, நவ. 21—

இன்று மாலை ஹைகோர்ட்டுக்கு எதிரில் ஒரு மாணவன்மீது பஸ் ஏறி அங்கேயே உயிர் போய்விட்டது. அச்சிறுவன் சாலையின் ஓரத்தில் உள்ள நடைப்பாதையின்மீது ஒரு ரப்பர்ப் பந்தைத் தரையில் தட்டிப் பிடித்துக்கொண்டே போனான். பந்து கையிலிருந்து தவறிச் சாலையில் உருண்டு சென்றது. பையன் அதை எடுப்பதற்காக ஓடினான். அவனுக்குப் பின்னாலிருந்து வந்த மோட்டார் அவன்மீது ஏறிவிட்டது. பையன் வயது பன்னிரண்டு.

1. மேலே உள்ள செய்திக் குறிப்புக்களைக் கவனித்தாயா? சென்னை போன்ற பெரிய நகரங்களில் இம்மாதிரி-

யான ஆபத்துக்கள் அடிக்கடி நேர்கின்றன. இவற்றுக்குக் காரணம், மாந்தரின் கவனக் குறைவேயாகும். சாலையில் நடக்கும் ஒவ்வொருவரும், சாலை விதிகளை அறிந்து அவற்றின்படி நடந்தால், இவ்வித விபத்துக்கள் நேரிடா. சாலை விதிகளை அறிந்திருத்தல் உயிர்ப் பாதுகாப்புக்கு மிக முக்கியம். சாலை விதிகள் எவை என்பதைக் கவனிப்போம் :

2. சில பிள்ளைகள் குறித்த காலத்தில் பாடசாலைக்கு வருவதில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு : புறப்பட வேண்டிய நேரத்தில் வீட்டை விட்டுப் புறப்படாமல், தாமதித்துப் புறப்படுவது ஒரு காரணம் ; சரியான நேரத்தில் புறப்பட்டாலும், நேரே பள்ளிக்கு வாராமல், இடைவழியில் விளையாடுவது மற்றொரு காரணம். இவ்வாறு காலம் கடந்து வகுப்புக்கு வரும் மாணவ மாணவிகள் ஆசிரியருடைய கோபத்துக்கு ஆளாகாமல் இருக்க, ஓட்டமும் நடையுமாய்ப் பள்ளிக்கு வருவார்கள் ; அப்போது ஏதேனும் சாலையைக் கடக்க நேர்ந்தால், சாலையின் இரு பக்கங்களையும் பாராமலே அவசரமாய்க் கடப்பார்கள் ; இவ்வித அஜாக்கிரதையான செயலால், ஆபத்திற்சிக்கிக்கொள்ளுவார்கள். ஆதலால், பள்ளிக்குச் சரியான நேரத்தில் புறப்பட்டு வரவேண்டும். வரும் வழியில் சாலைகளைக் கடக்க நேர்ந்தால், இரு பக்கங்களையும் பார்த்து, வண்டிகள் இல்லாத போது செல்ல வேண்டும். சிலர் வண்டி சற்றுத் தூரத்தில் வருவதைக் கண்டும், அது வருவதற்குள் போய்விடலாம் என்று அவசரப்பட்டுச் சாலைய்யக் கடந்து ஆபத்துக்கு ஆளாவர். ஆதலால், கண்ணிருந்தும் குருடர் போலவும், காதிருந்தும் செவிடர் போலவும் அவசரப்பட்டுச் சாலையைக் கடவாதே.

3. சிலர் நடைப்பாதையில் பந்து விளையாடிக்கொண்டு வருவர். அது சாலையில் போய்விடுமானால், கண்ணை மூடிக்கொண்டு, அருகில் வண்டிகள் வருவதைக்கூடக் கவனியாமல் அதன் பின்னே ஓடி, வண்டியில் அகப்பட்டுக்கொள்-

வர். சிலர் ஒருவரையொருவர் துரத்திக்கொண்டு சாலையின் குறுக்கே ஓடி, ஆபத்துக்குள்ளாவதும் உண்டு. இஃது எவ்வளவு மதியீனம், பார்! பந்து போனால் வேறு பந்து வாங்கிக்கொள்ளலாம். உயிர் போனால் மீண்டும் வருமா? இவ்வாறு நம்முடைய கவனக் குறைவால் கைகால்களை இழத்தல், உயிரையே இழத்தல் போன்ற பேராபத்துக்கள் நேரிடுகின்றன. இவ்வித ஆபத்துக்களிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ளும் முறைகளே உயிர்ப்பாதுகாப்பு முறைகள் எனப்படும். அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கவனமாகப் படி. அப்படியே நடந்துகொள்.

உயிர்ப்பாதுகாப்பு முறை விதிகள் :

1. சாலையில் நடக்கும் பொழுது கண்களையும் காதுகளையும் உபயோகிக்கப் பழக வேண்டும். அதாவது, வண்டிகள் வருவதைக் கண்ணாற்பார்ப்பதும், வண்டியோட்டிகள் தரும் எச்சரிக்கைகளைக் காதுகளால் கேட்பதுமே கண்ணையும் காதையும் உபயோகித்தலாம்.

2. சாலையின் ஓரத்தில் நடைப்பாதைகள் இருந்தால், எப்போதும் அவற்றின்மீது நடத்தல் வேண்டும். நடைப்பாதை இல்லாவிட்டால், சாலையின் வலப்பக்கத்தில் ஓரமாகச் செல்ல வேண்டும். அப்போதுதான் எதிரில் வரும் வண்டிகளைப் பார்த்து ஒதுங்கி நடத்தல் எளிதாயிருக்கும்.

3. சிறுவர் சிறுமியர் சாலையிலும், நடைப் பாதைகளிலும்கூடி நின்று பேசுவதும், விளையாடுவதும் கூடா.

4. சாலைகளைக் கடக்கும் பொழுது அவசரம் இல்லாமல் இரண்டு பக்கங்களையும் பார்க்க வேண்டும். வண்டிகள் அருகில் வரும்போது அவசரப்பட்டுக் கடத்தல் கூடாது. சாலையைக் கடக்கும்போது முதற்பாதித் தூரம் போகும் வரையில் வலப்பக்கமும், மறு பாதியைக் கடக்கும்போது இடப்பக்கமும் பார்த்துச் செல்ல வேண்டும்.

5. மோட்டார் பஸ், மின்சார வண்டி, புகை வண்டி ஆகிய எந்த வண்டியிலும் ஓடும்போதே ஏறுவதும் இறங்குவதும் கூடா. வண்டி நின்ற பிறகே ஏற வேண்டும்; இறங்க வேண்டும். அன்றியும், வண்டி ஓடிக்கொண்டிருக்கும் போது சன்னலின் வழியே தலையை நீட்டுவதும், கைகளை நீட்டுவதும் கூடா. கதவுகளின் ஓரத்தில் நின்றுகொண்டு பிரயாணம் செய்வதும் தவறு.

6. பழத்தோல்களைச் சாலையில் எறிதல் கூடாது. சாலையின் நடுவே பழத்தோல்கள் இருந்தால், அவற்றைக் காலால் எற்றி, ஓரத்தில் தள்ளிவிட வேண்டும்.

7. குண்டூசி, ஆணி, கண்ணாடித்துண்டு முதலியவற்றைச் சாலைகளிலும், நடைப்பாதைகளிலும் போடக்கூடாது. அவற்றைக் குப்பைத் தொட்டிகளில் எறிய வேண்டும்.

8. சாலை ஓரத்தில் வண்டிகள் நின்றிருந்தால், அவற்றின் பின் புறத்தில் சாலையைக் கடவாதே. நின்றிருக்கும் வண்டிக்குச் சிறிது தூரத்திலேயே சாலையைக் கடத்தல் வேண்டும்.

9. குளம், கிணறு, ஏரி முதலிய நீர் நிலைகளில் இறங்காதே. நீந்தத் தெரிந்தாலும், அதிக ஆழத்திற்செல்வது கூடாது.

10. நெருப்புக் குச்சியைக் கிழித்து விளையாடாதே. விளக்கேற்றல் முதலிய அவசியம் நேர்ந்தால், நெருப்புக் குச்சியைப் பெட்டியின் பக்கத்தில் தேய்க்கும்போது பின் பக்கமிருந்து முன் பக்கம் குச்சி செல்லும்படி தேய்த்துக் கிழித்தல் வேண்டும்.

பயிற்சி :

I. விடை எழுது :—

அ. உயிர்ப் பாதுகாப்புக்கு முக்கியமானவை எவை?

ஆ. மாணவ மாணவிகள் நேரங்கழித்துப் பள்ளிக்கு வரக் காரணம் என்ன? நேரங்கழித்து வருவதால் ஏற்படும் தீமை யாது?

இ. "சாலையிற் செல்லும் போது கண்ணையும் காதையும் உபயோகி."—இதற்குப் பொருள் என்ன?

ச. சாலைகளைக் கடப்பதற்குமுன் செய்யவேண்டுவது யாது?

உ. வண்டிகளிற் செல்லும் போது கவனிக்க வேண்டுபவை யாவை ?

ஊ. சாலைகளில் எறியத்தகாத பொருள்கள் யாவை ?

II. கீழ் வரும் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :—

செய்தி, அடிக்கடி, தாமதம், காலந்தாழ்த்து, அஜாக்கிரதை, மதியீனம், கவனக்குறைவு, வலப்பக்கம், பிரயாணம்

III. கீழே தரப்பட்டுள்ள சொற்களையும் தொடர்களையும் உபயோகித்துக் 'காடு' என்னும் பொருள் பற்றிச் சில வாக்கியங்கள் எழுது :—

பலவகை—உயர்ந்து பரந்த மரங்கள்—மழையும் வெயிலும் அதிக-முள்ள பிரதேசங்கள்—மிருகங்கள்—பூச்சி இனங்கள்—புதர்கள்—சதுப்பு—வழிகள் இரா—மனிதர் செல்ல இயலாது—பல நன்மைகள் உண்டு—மேகத்தைத்தடுக்கும்—சாமான்கள் செய்ய—அடுப்பு எரிக்க—மருந்து வகைகள்

29. கடிதங்கள்

32, வடக்கு மாசி வீதி,
மதுரை,
10—11—1949.

வகுப்பு ஆசிரியர் அவர்களுக்கு,
5-ஆம் வகுப்பு, A. பிரிவு,
சௌராஷ்டிர உயர்தரப் பாடசாலை,
மதுரை.

அன்புடைய ஐயன்மீர்,

வணக்கம்! என் தமக்கைக்குச் சென்னையில் நடைபெறும் திருமணத்துக்கு யான் போக வேண்டி இருத்தலால், நாளை முதல் ஐந்து நாட்கள் யான் பள்ளிக்கு வர இயலாமையை அனுமதிக்கக் கோருகிறேன்.

உங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்,
சி. குமரப்பன்.

முகவரி:

வகுப்பு ஆசிரியர் அவர்களுக்கு, 5-ஆம் வகுப்பு, A. பிரிவு, சௌராஷ்டிர உயர்தரப் பாடசாலை, மதுரை.

12, அரச வீதி,
தஞ்சை,
15—11—49.

தலைமை ஆசிரியர் அவர்களுக்கு,
தேசிய உயர்நிலைப்பள்ளி,
தஞ்சை.

அன்புடைய ஐயன்மீர்,

வணக்கம் பல! யான் உங்கள் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு, C. பிரிவில் படிக்கும் மாணவி. எங்கள் குடும்பம் வறுமை நிறைந்தது; மிகவும் பெரியது. என் தமையனார் ஒருவரும், தமக்கையார் ஒருவரும் மேல் வகுப்புக்களில் படித்து வருகின்றனர். என் தந்தையாருடைய மாத வருமானம் குடும்பச் செலவுக்கே போதுமானதாயில்லை. ஆதலால், அன்பு கூர்ந்து யான் சம்பளமில்லாமல் படிக்க அனுமதிக்கும்படி உங்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

என் திறமை பற்றியும், நடத்தை பற்றியும் என் வகுப்பாசிரியர் நற்சாட்சியளிப்பார்.

உங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவி,
எஸ். சரஸ்வதி.

முகவரி :

தலைமை ஆசிரியர் அவர்களுக்கு, தேசிய உயர்நிலைப்பள்ளி, தஞ்சை.

244, அங்கப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதராஸ்,
20—11—1949.

அன்புள்ள தந்தையீர்,

யானும், என் தாயாரும் இறைவன் அருளால் நலமாயிருக்கிறோம். உங்கள் நலம் அறிய விரும்புகிறேன். சென்ற மாத இறுதியில் எங்கள் பள்ளியின் காலாண்டுப் பரீட்சை நடைபெற்றது. யான் பொது அறிவுப்பாடம் தவிர, மற்றப் பாடங்கள் எல்லாவற்றிலும் அறுபது மார்க்குகளுக்குமேல் பெற்றுள்ளேன். பொது அறிவுப் பாடத்திலும் முப்பது மார்க்குகள் கிடைத்தன. அரையாண்டுப் பரீட்சையில் இவற்றைக்காட்டிலும் அதிக மார்க்கு வாங்குவேன் என்பது நிச்சயம்.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் எங்கள் வகுப்பு மாணவர்களை ஆசிரியரும் தலைமை ஆசிரியரும் திருவேங்கடத்துக்கு உல்லாசப் பிரயாணமாக அழைத்துச் செல்ல நிச்சயித்துள்ளார்கள். அப்பிரயாணத்தில் யானும் கலந்துகொள்ள விரும்புகிறேன். உங்கள் உத்தரவை எதிர் நோக்குகிறேன். அன்பு கூர்ந்து உங்கள் ஆசியுடன் பத்து ரூபாயும் உடனே அனுப்பி வைக்கக் கோருகிறேன்.

வணக்கம் பல.

உங்கள் அன்புக்குரிய,
வி. சாமிநாதன்.

முகவரி :

திருவாளர்
வேலாயுதப் படையாட்சி அவர்களுக்கு,
காரைக்காடு போஸ்டு,
தென்னாற்காட்டு ஜில்லா.

செய்யுட்பாடங்கள்

I. துதிப்பாட்டு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் ;—கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே ! நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா. 1

பெருந்திரு வும்சய மங்கையும்
ஆகியென் பேதைநெஞ்சில்
இருந்தரு ளும்செஞ்சொல் வஞ்சியைப்
போற்றின்எல் லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானம் தரும்;இன்ப
வேதப் பொருளுந்தரும் ;
திருந்திய செல்வம் தரும்;அழி
யாப்பெருஞ் சீர்தருமே. 2

முருகனே ! செந்தில் முதல்வனே ! மாயோன்
மருகனே ! ஈசன் மகனே !—ஒருகைமுகன்
தம்பியே ! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 3

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி! 4

கன்னி பாலனைக் காசினி தனிலவ தரித்து
மன்னு சீவகோ டிகளெலாம் வான்கதி மருவத்
தன்னு யிர்ப்பரித் தியாகமும் சிலுவையில் தந்த
என்னு பாசன மூர்த்தியை அஞ்சலித் திடுவாம். 5

II. சதகத் திரட்டு :

1. செல்வச் சிறப்பு

பொருளுள்ள பெயர்களுக்(கு) எழிலுண்டு புகழுண்டு
புண்யவசம் மிகவுமுண்டு ;
பூதலத் தவரெலாம் கண்டவுட னேதொழுது
பூபதி குபேரனென்பார் ;
திருகொன்றி லாதமதி யுண்டு ;திறன் உண்டு ;மெய்த்
தேசிகர்தம் அருளுமுண்டு ;
தீங்கியற் றினுநன்மை யென்பார்கள் ; பெருமையும்
தீரமொடு வீரமுண்(டு); அங்(கு)
அருளுண்டு ; பந்துசன உறவுண்டு ; நண்பினர்கள்
ஆனோர்கள் உண்டு; நிதமும்
அவர்முகம் தன்னிலழ குண்டு;களை யுண்டு; நல்
ஆனந்த பூர்த்தியுண்டு ;
கருணைசெய் தன்பர்கட்(கு) அழியாத நிதியுதவுங்
கற்பக விராசமேவுங்
கங்கைபுனை யீசனே ! மங்கைமகிழ் நேசனே !
கயிலையங் கிரிவாசனே !

கயிலாச நாதர் சதகம்] [சிதம்பரம் பிள்ளை

2. செய்யத் தக்கவை

வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டும்;கற்ற
வழியிலே நிற்கவேண்டும் ;
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண் டும் ;தேடி
வளரறம் செய்யவேண்டும் ;
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்;பிரிதல்
செய்யா திருக்கவேண்டும் ;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டும்;கொண்டு
தியாகம் கொடுக்கவேண்டும் ;

ஞாலமிசை பலதருமம் நாட்டவேண் டும்;நாட்டின்
நன்ருய் நடத்தவேண்டும் ;
நம்பனிணை யடிபூசை பண்ணவேண் டும்;பண்ணி
ஞலுமிகு பத்திவேண்டும் ;
ஆலமமர் கண்டனே ! பூதியணி முண்டனே !
அனகன்!எம தருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே !

அறப்பளீசுர சதகம்] [அம்பலவாணக் கவிராயர்

3. இதனில் இது நன்று

கடுகடுத் தாயிரஞ் செய்குவதின் இன்சொலால்
களிகொண் டழைத்தல்நன் று ;
கனவேள்வி ஆயிரம் செய்வதிற் பொய்யுரை
கருத்தொடு சொலாமைநன் று ;
வெடுவெடுக் கின்றவோர் அவிவேகி யுறவினில்
விவேகியொடு பகைமைநன் று ;
வெகுமதிகள் ஆயிரம் செய்வதின் அரைக்காசு
வேளைகண் டுதவல்நன் று ;
சடுதியிற் பக்குவம் சொல்லும் கொடைக்கிங்குச்
சற்றுமிலை யென்னல்நன் று ;
சம்பத்து டன்பிணியில் மெலிகுவதின் நோயற்ற
தாரித்தி ரியம்நன் றுகாண் ;
மடுவினிற் கரியோல மென்னவந் தருள்செய்த
மால்மருக ஞனமுதல்வா !
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே !

குமரேச சதகம்] [குருபாத தாசர்

4. ஒன்றில்லாமல் ஒன்று பயனில்லை

சந்திர னிலாஇரவு, மதுரமில் லாதகவி,
தனயரில் லாதசெல்வம்,
சற்சன ரிலாதவூர், புரவியில் லாதபடை,
தளபதி யிலாதசேனை,
பைந்தொடி யிலாதமனை, பாடலில் லாவோசை,
பத்தியில் லாதபூசை,
பார்த்திபரில் லாதபட் டணம்,யூக மந்திரிகள்
பற்பலர் இல்லாதஅரசு,
கந்தமில் லாதமலர், சத்தியமி லாதவாய்,
கல்வியில் லாததேகம்,
கனவினய மில்லா நியோகி,சுசி இல்லாத
கன்மம்,உப தேசமில்லா
மந்த்ரமிவை வித்வசன மில்லாத சபைஎன்பர்;
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவேங் கடராயனே!

திருவேங்கட சதகம்] [நாராயண பாரதியார்

TB 03165 N4

III. கதைப் பாட்டு

முயலும் சிங்கமும்

87995

குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதுண் டதனைச் சொல்வேன்:
செறியுமோர் காட்டி லேஓர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடியூன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி

"ஆணிளஞ் சிங்க மே!உன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா ;
விதத்தினில் தினம்ஒன் றாக
ஊணுனக்(கு) அளிப்போம்," என்ன,
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்று
அருந்தியங்(கு) இருக்கும் நாளில் : 2
தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்,
"இனிஅது விடாது நம்மை ;
எனினும்ஓர் எடுப்பெ டுத்து,
வினையைஇப் போது செய்து
வென்றுநாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும் ;
நமக்குநற் புகழ்உண்டு," என்றே 3

கருதிஅச் சிங்கத் தின்றன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும், முயலை நோக்கி
மன்னன்,"என் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை ; பிந்தி
வருவதென் ? உரைநீ," என்று
மனந்தனிற் சினந்து கூற, 4

"ஐய!உன் பசிவே ளைக்கே
அடியனேன் வந்தேன் ; அங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித்தி ருந்தேன் ;

பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்யஉன் பக்கல் வந்தேன்
சுவாமி!''என்(று) இறைஞ்சி நிற்க 5

“ சிங்கம்நாம் அல்லால் வேறோர்
சிங்கமும் கண்டா யாகில்
அங்கதைக் காட்ட வா,''என்(று)
அழைத்தலும், அழைத்துப் போய்ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர(வு) அதனைக் காட்ட,
அங்கதை எட்டிப் பார்க்க
அதனில்தன் உருவம் தோன்ற, 6

தன்உரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து,
துன்னுபங் கத்த முந்தித்
துளங்கியே செத்த தந்தோ!
‘மன்னிய பகையா னலும்
மதியினல் வெல்ல லாகும்,’
என்னுமோர் அரிய நீதி
இக்கதை விளக்கு மன்றே? 7

பஞ்சதந்திரம்] [வீரமார்த்தாண்ட தேவர்

IV. நீதி நூல்கள்

1. இனியவை நாற்பது

யானை யுடைப்படை காண்டல் மிகவினிதே;
ஊனைத்தின்(று) ஊனைப் பெருக்காமை முன்னினிதே;
கான்யாற் றடைகரை ஊரினிது; ஆங்கினிதே
மான முடையார் மதிப்பு. 1

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே:
தானம் அழியாமைத் தானடங்கி வாழ்வினிதே ;
ஊனமொன்(று) இன்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது. 2

கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகவினிதே ;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே ;
எட்டுணை யானும் இரவாது தானீதல்
எத்துணையும் ஆற்ற இனிது. 3

மன்றில் முதுமக்கள் வாழும் பதியினிதே ;
தந்திரத்தின் வாழும் தவசிகள் மாண்பினிதே ;
எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை யினிது. 4

பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே ;
வித்துக்குற் றுண்ணா விழுப்பம் மிகவினிதே ;
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினிய தில். 5

—பூதஞ்சேந்தனார்

2. இன்னா நாற்பது

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா ;
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா ;
கடுமொழி யாளர் தொடர்பின்னா ; இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு. 1

எருதில் உழவர்க்குப் போகீரம் இன்னா ;
கருவிகள் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா ;
திருவுடை யாரைச் செறல்இன்னா ; இன்னா
பெருவலியார்க் கின்னா செயல். 2

ஆற்றல் இலாதான் பிடித்த படையின்னா;
நாற்றம் இலாத மலரின் அழகின்னா;
தேற்றம் இலாதான் துணிபின்னா; ஆங்கின்னா
மாற்றம் அறியான் உரை. 3

பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா;
இருள்கூர் சிறுநெறித் தாந்தனிப்போக் கின்னா;
அருள்இலார் தங்கண் செலவின்னா; இன்னா
பொருள்இலார் வண்மை புரிவு. 4

மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்தல் இன்னா;
துணிவிலார் சொல்லும் தறுகண்மை இன்னா;
பணியாத மன்னர் பணிவின்னா; இன்னா
பிணியன்னார் வாழும் மனை. 5

—கபிலர்

3. நன்னெறி

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்;—பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழைமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 1

'கடலே அனையம்யாம் கல்வியால்!' என்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே:
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். 2

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க;—வெள்ளம்
தடுத்தல் அரிதோ, தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு. 3

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் :—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று. 4

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே :—பொன்செய்
கதிர்வளையாய்! பொங்கா(து) அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். 5

—துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

V. தனிப் பாடல்கள்

முன்னமோர் பொய்யுரைக்க அப்பொய்வெளி
ஆகாமல் மூடும் வண்ணம்
பின்னுமோர் பொய்யுரைக்க அதையும்நிலை
நிறுத்திடவோர் பெரும்பொய் சொல்ல
இன்னவகை கைதவம்ஒன்(று) இருநூறு
கைதவத்துக்(கு) இடமாம் ; வாய்மை
தன்னையே முன்பகரில் சங்கடம்ஒன்(று)
இலை; அதுவே தகைமை நெஞ்சே ! 1

—வேதநாயகம் பிள்ளை

மேகமெல்லாம் ஒன்றாய்க்கூடித் தான்கறுக்குதே !—மெத்த
மின்னல்மின்னி வாசவன்கை வில்லெடுக்குதே !
நாகரிகப் பொதிகைமலைக் காற்றடிக்குதே !—கொண்டல்
நாலுதிக்கும் கோடையிடி தானிடிக்குதே !
ஏகபோக மாமரத்தில் குயில்கள்கூவுதே !—மழைக்கு
ஏற்றமாம் சொறித்தவளை கூப்பிடுகுதே !
ஆகையினால் எங்கள்திருக் கூடல்நகரில்—இருள்
அந்திநேரம் எல்லாம்மழை வந்துபெய்யுமே ! 2

—முக்கூடற் பள்ளு

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்,
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்,
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பால் சேர்ந்தேன்; "அப்பா!
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும், வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணும், கோப மாகப்
பஞ்சவரில் ஒருவன்வில்லால் அடித்த புண்ணும்
பார்," என்றே காட்டிநின்றான் பரமன் தானே. 3

—இராமசந்திர கவிராயர்

முக்கண்ணன் என்றரனை முன்னோர் மொழிந்திடுவார்;
அக்கண்ணற்(கு) உள்ள(து) அரைக்கண்ணே:—மிக்க
உமையாள்கண் ஒன்றரை; மற் றான்வேடன் கண்ஒன்(று)
அமையும்இத னல்என்(று) அறி. 4

—பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

சிரம்பார்த்தான் ஈசன்; அயன் தேவிதனைப் பார்த்தான்;
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன்;—உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணான்சீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு. 5

—கம்பர்

சோலையுங் காத்துநல் லாலையுங் காத்துத் துரோபதைதன்
தானையுங் காத்தடைந் தானையுங் காத்துத் தடத்தகலி
மானையுங் காத்தனு மானையுங் காத்து மடுவில்விழும்
ஆனையுங் காத்தவ னே!எனைக் காப்ப(து) அரிதல்லவே! 6

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

VI. தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் ; வாழ்க தமிழ்மொழி !
வாழிய வாழியவே !
வான மளந்தத னைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே !
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே !
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே !
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே !
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே !
வாழ்க தமிழ்மொழி ! வாழ்க தமிழ்மொழி !
வாழ்க தமிழ்மொழியே !
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே !

—சி. சுப்பிரமணிய பாரதியார்

TB
OA1(S)
N49
87995

UMA VACHAKAM

TAMIL

BOOK V FOR STANDARD V

By T. S. UMAPATHY, M.A., L.T., (Dip-in-Geog.)

UMADEVAN & COMPANY
PUBLISHERS, P. O. B. 1584, MADRAS-1

Copyright]

1949

[Price As. 9.